www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—31 டிசம்பர் '87

3-3

விலை ரூ : 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தாக்கர்-நடராஜன் கமிஷன் அறிக்கை:

## காட்டுமிராண்டிகளின் ஆட்சியில் வைத்ததுதான் சட்டம் - நீதி!




படிப்பகம்

# வாசகர் கடிதம்

www.padippakam.com




● டாக்டர் பட்டம் பெற அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக் கழகத்துக்கு நன்கொடை என்ற பெயரில் நமது வரிப்பணத்தை வாரியிறைக்கும் ஊதாரிப் பிரதமர் ராஜீவின் முகத்திரையைக் கிழித்துக் காட்டியதற்கு நன்றி! ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் கிரிமினல் குற்றவாளிகளான ராஜீவ் கும்பலும், அதன் குண்டர் படையான காங்கிரசு கட்சியினரும் புதிய ஜனநாயகத்துக்கு தொல்லைகள் கொடுக்க வாய்ப்புள்ளது. ஆனாலும் எதற்கும் அஞ்சாமல் துணிந்து முன்னேறுங்கள்!

எம். தொல்காப்பியன்
சுந்தரபெருமாள் கோவில்

● இலங்கையிலிருந்து வந்த நான் ஈழச் செய்திகளை அறிய 'தேவி' வார இதழைப் படிப்பதுண்டு. தற்செயலாக நான் புதியஜனநாயகம் வாங்கிப் படித்தேன். ஒவ்வொரு செய்தியையும் எவ்வளவு தெளிவாக ஆதாரத்துடன் கூறுகிறீர்கள். பணத்திற்காக எதையும் எழுதும் இக்காலத்தில் இப்படியும் ஒரு பத்திரிகையா என்று அதிசயித்து, தீவிர வாசகனாகிவிட்டேன். சரியான விஷயங்களை ஆதரிப்பதும் எங்கள் புலிகளே தவறு செய்தாலும் தட்டிக் கேட்பதுமான உங்களின் சரியான ப்பார்வையை பாராட்டுகிறேன்.

சபாநாதன் திருச்சி

● ஈழப் பிரச்சினையில் கலைஞர்களும், மாவீரன்களும், தளபதிகளும் மூக்கறுபட்டு கிடக்கிறார்கள். ராஜீவுக்கு காவடி தூக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் சாயம் வெளுத்து சந்தி சிரிக்கிறார்கள். ஆயிரக்கணக்கணக்கான மக்களைக் கொன்று சிறிய நாட்டின் மீது மேலாதிக்கம் செலுத்தும் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் உலக மக்கள் முன் அம்பலப்பட்டு வருகிறார்கள். இந்த நிதர்சன உண்மைகளை துணிவோடு தமிழகத்தில் கூறுவது புதிய ஜனநாயகம் மட்டுமே!

கணேஷ் கம்பம்

● டிசம்பர் 1—15 இதழில் விமர்சனமும் விளக்கமும் பகுதியில் ஈழத் தோழருக்கு தாங்கள் அளித்த விளக்கம் வெகு அருமை. அதேபோல ரவிக்குமாரின் விமர்சனத்துக்கு தாங்கள் அளித்த விளக்கம் ஏற்புடையதே. பிழைப்புவாதிகள் விஷயத்தில் மென்மையைக் கடைபிடிக்கத் தேவையில்லை. ஈழத் தமிருக்காக உயிர்விடப் போவதாய் சவடால் அடித்த 'தமிழினத் தலைவர்' ஏன்தான் இன்னும் உயிரோடு இருக்கிறாரோ தெரியவில்லை.

இரா. பாரதிநாதன் ஜலகண்டபுரம்

● சென்ற இதழில் நாடாளுமன்ற ஆட்சி எனற போர்வைக்குள் மன்னராட்சிக்குரிய வாரிசு முறையைப் புகுத்தி பிழைப்புவாதிகளாக பதவி வெறியர்களாக செயல்பட்ட—செயல்படும் ஓட்டுப் பொறுக்கி அரசியல் வியாதிகளை சரியாக அடையாளம் காட்டி அம்பலப்படுத்தியது சிறப்பாக இருந்தது.

சி. ஜீவா ஊற்றங்கரை

● ஓட்டுகட்சிகளின் அராஜகத்தையும், போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் எடுப்பாகவும் துணிச்சலோடும் அம்பலப்படுத்திக் காட்டுவது புதிய ஜனநாயகம் ஒன்றுதான். நவம்பர் 16—30 இதழில் வேலூர் காவல் துறை சுயவாளிகளிலிருந்து தொடங்கி தமிழகம் முழுவதும் வேர்விட்டு ஆட்டிப்படைக்கும் போலீஸ் கும்பலை நவீன யுத்தப் பிரபுக்களாக சித்தரித்துக் காட்டியது சிறப்பாகவும் உணர்வூட்டுவதாகவும் இருந்தது.

தி. அன்பு ஊற்றங்கரை

● பெரும்பாலான அரசியல்வாதிகளின் வாரிசுகள் அரசியல் அதிகாரத்திலும் தலையிடுவது பெரும்பாலான மக்களுக்குத் தெரிந்ததே. அதை சென்ற இதழில் சிறப்புக் கட்டுரையாக பிரசுரித்திருப்பது எடுப்பாக இல்லை. டெல்லி-போபால் விஷயங்களில், இப்போதைய பாதிப்பை விளக்கி எழுதியிருப்பினும் இதை பழைய செய்தியாகவே மக்கள் கருதுவர். இதனால் இந்த இதழ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர். கே. திருச்சி

● நவம்பர் 16—30 இதழில் பாசிச ராஜீவ் கும்பல் ரீகனிடம் சரணடைந்த கதையை தொகுப்பாக கூறி இன்றைய அரசியல் நிலைமையில் உள்ள சிறு அசைவையும் சிறப்பாக படம் பிடித்துக் காட்டிய புதிய ஜனநாயகத்துக்கு புரட்சிகர வாழ்த்துக்கள்!

எஸ். பெருமாள் வேலூர்

● நவம்பர் 16—30 இதழில் வெளியான இதுதான் இன்றைய இந்தியா எங்களை ஏமாற்றி விட்டது. இது போன்ற புள்ளி விவரங்களை உள்ளே பெட்டிச் செய்தியாக கொடுத்திருக்க வேண்டும். ஜனரஞ்சமான, மக்களுக்கு உணர்வூட்டும் இப்பக்கத்தில், பொருத்தமான படங்களையே தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

வாசகர் வட்டம் கல்லை வட்டம்

● மிகக் குறைந்த விலையில் ஏராளமான செய்திகளைத் தரும் ஒரே இதழ் புதிய ஜனநாயகம்தான்! எந்த செய்தியும் உண்மைதானா என்று நம்புவதற்கு (குறிப்பாக ஈழச் செய்திகள்) புதிய ஜனநாயகத்தைப் பார்த்த பிறகுதான் உறுதியளிக்க முடியும் என்று நான் நண்பர்களிடம் கூறுவதுண்டு. புதிய ஜனநாயகம் வெறும் செய்திகளை தரும் பத்திரிக்கை அல்ல; பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகம்.

கண்ணையன் இனாம்கிளியூர்

● நவம்பர் 16—30 இதழில் ராஜீவின் புதிய பேரங்கள் என்ற சிறப்புக் கட்டுரையில் அமெரிக்கா மற்றும் மேற்கு ஏகாதிபத்தியங்களிடம் ராஜீவ் கும்பல் சரணடைந்ததை விளக்கிய அதே சமயம், உலக மேலாதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ள ரஷிய சமூக ஏகாதிபத்தியத்திடமும் அது அடிபணிந்து கிடப்பதையும் விபரங்களுடன் வெளியிட்டிருந்தால் சரியான புரிதலை ஏற்படுத்தியிருக்கும். அவ்வாறில்லாததால் இக்கட்டுரை ஒரு பகுப்பாய்வு மட்டுமே; தொகுப்பாய்வு அல்ல.

புரட்சிப்பண்பாட்டு இயக்கம்
ராணிப்பேட்டை

## அமைப்புச் செய்தி

ஈழ மக்களுக்கு பாசிச ராஜீவும் அடிவருடி எம்ஜிஆரும் செய்த துரோகத்தனத்தையும், இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் படுகொலைகளையும், எதிர்க்கட்சிகளின் சுயநல, சந்தர்ப்பவாத கையாலாகாத்தனங்களையும் அம்பலப்படுத்தும் நோக்குடன் கடந்த 18—11—87 அன்று கல்லை வட்டாரத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலும் விவசாயிகள் விடுதலை முன்னணி சைக்கிள் பேரணியை நடத்தியது. ஏறத்தாழ 80 சைக்கிள்களுக்கு மேல் பங்கேற்ற இப்பேரணியும், பிரசுரங்களும், முழக்கங்களும் வழியெங்கும் மக்கள் மத்தியில் உற்சாக வரவேற்பைப் பெற்றன. இதுபோன்று இயக்கம் நடத்துவதற்கு மக்கள் மனமுவந்து நன்கொடைகளை வாரி வழங்கினர். எந்த அமைப்பும் உண்மைகளை கிராமப்புற மக்கள் மத்தியில் கொண்டு செல்லாத நிலையில் வி. வி. மு. நடத்திய இப்பேரணி மக்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

3

16—31 டிசம்பர் 87

வல்லரசுகளின் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்:

# சாவு வியாபாரிகளின் சமாதான நாடகம்

'வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம்' 'சமாதானத்துக்கான மாபெரும் தொடக்கம்' 'சர்வதேசப் பிரச்சினைகளில் ஒரு மாபெரும் திருப்புமுனை' என வாஷிங்டனில் ரீகன்—கோர்பச்சேவ் கைச்சாத்திட்ட அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் பற்றி இரு மேல்நிலை வல்லரசுகளின் ஊதுகுழல்களும் அவர்களின் எடுபிடிகளும் பரபரப்பூட்டுகின்றனர். இந்தியப் பாராளுமன்றமும் அமெரிக்க சார்பு நேடோ ஒப்பந்த நாடுகளும் ரஷிய சார்பு வார்சா ஒப்பந்த நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்கின்றன. மூன்றாவது உலக யுத்த அபாயமே நீங்கிவிட்டது போல் அடிவருடிகள் கதைக்கின்றனர்.

'ஐரோப்பாவில் நிறுத்தப்பட்டுள்ள சுமார் 2600 நடுத்தர தொலைவு அணு ஆயுத ஏவுகணைகளை அகற்றுவதற்கான இந்த ஒப்பந்தம், அடுத்த அடுத்த கட்டமாக நெடுந்தொலைவு அணு ஆயுத ஏவுகணைகளை ஒழிக்க இட்டுச் செல்லும்; இது தவிர, ரஷிய அமெரிக்க வல்லரசுகள் சம்பந்தப்பட்ட பதட்ட நிலை நிலவும் நாடுகளிலும் சமாதானத்தை நிறுவுவதற்கான பேச்சு வார்த்தைகளைத் துவக்கும்' என்றெல்லாம் பிரச்சாரம் செய்து உலக சாவு வியாபாரிகளை சைவப் புலிகளாகச் சித்தரிக்கின்றனர்.

ஆனால் இரு மேல்நிலை வல்லரசுகளுமே போட்டி போட்டுக் கொண்டு கொடிய, அதிக அழிவுத் திறன் கொண்ட புதுப்புது ஆயுதங்களை உருவாக்கிக் குவிக்கின்றன. உலக மேலாதிக்கத்திற்காக நட்சத்திரப் போர் என்னும் உயர்ந்த கட்டத்திற்குள் அடியெடுத்து வைக்க போட்டா போட்டியில் குதிக்கின்றன. குவிக்கப்பட்டுள்ள மொத்த அணு ஆயுதங்களில் 5 சதவிதத்தை ஒழிப்பதுதான் இந்த ஒப்பந்தத்தின்நோக்கம். ரஷியாவுடன் நடக்கும் போரில் மண்ணில் ஒரு கால் தோற்றாலும் விண்ணில் வெற்றி வாகை சூடுவோம் என மமதையோடு கொக்கரித்த அமெரிக்காவின் நட்சத்திரப்போர் திட்டத்தை அம்பலப்படுத்தி 'சமாதானக்'கொடியைத் தூக்கிப் பிடித்த ரஷியா, இந்த ஒப்பந்தத்தின் போது நட்சத்திரப் போர் பற்றி வாய் திறக்கவில்லை.

சமாதானத்தில் எள்முனையளவும் அக்கறையற்ற இச்சாவுவியாபாரிகள், தாங்கள் வகுத்த ஆயுதக் குறைப்பு உடன்பாடுகளையே கிழித்தெறியும் இக்கயவாளிகள், ஒருவர் மற்றவரை ஆயுத பலத்தால் விஞ்சிவிடக்கூடாது என்பதில்தான் கண்ணுங் கருத்துமாயுள்ளனர். அதாவது, தங்கள் ஆயுதத் தளவாட வலிமையை அதிகரித்துக்கொள்ள அவகாசமளிப்பதுதான் 'சமாதான' சந்திப்பு அரங்கங்கள். 'சால்ட்' ஒப்பந்தம் முதல் இன்றுவரை இதுதான் தொடர் நிகழ்ச்சியாக உள்ளது.

மரபு வழி அணு ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்துவிடும் நட்சத்திரப் போரில் அமெரிக்கா ஒரு படி முன்னேறி விட்டது. கோடிக்கணக்கான ரூபிளைக் கொட்டி அமெரிக்காவை முந்த உடனடி சாத்தியமில்லாத நிலையில் காலத்தை வாங்குவதற்காக சமாதானக் கொடியை தூக்கிப் பிடிக்கிறது ரஷியா. அதே சமயம் உலக மக்கள் முன்அம்பலப்பட்டு நிற்கும் அமெரிக்கா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் சமாதான விரும்பியாக நன்மதிப்பைப் பெற்று தனது காலாவதியான ஆயுதங்களை குப்பைக் கூடையில் தூக்கியெறிய சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளது.

5 சதவீத அணு ஆயுதங்களை கலைப்பதாலோ ஒரு சில யுத்த தந்திர கேந்திரங்களில் தற்காலிக 'சமாதானத்தை' நிலைநாட்டுவதாலோ சமாதானம் ஏற்பட்டு விடாது. ஏகாதிபத்திய கட்டமைவு கலைக்கப்படாத வரை யுத்த அபாயம் என்கிற மனித சமூக அழிவுக்கான அபாயம் நீங்கிவிடாது. அதுவரை இரு வல்லரசுகளும் எழுப்பும் சமாதான கூச்சல்களும், ஏற்படுத்தும் ஒப்பந்தங்களும் இதுவரை இல்லாத அளவு மிகக் கொடூரமான முறையில் மேலாதிக்கப் போட்டிக்கான யுத்த தயாரிப்புகளை மூடி மறைப்பதற்கான திரைகளே!

வல்லரசுகள் இந்தஅளவுக்காவது ஆயுதங்களைக் குறைக்க முன்வந்துள்ளது சமாதானத்தைக் கொண்டு வந்துவிடும் என்கிற அடிவருடிகளின் பிரச்சாரம், அவர்களின் கொடிய விண்வெளிப் போர் தயாரிப்புக்கு விட்டுக் கொடுக்கும் நோக்கத்தை உள்ளடக்கியது. மேலாதிக்கம் மற்றும் யுத்தக் கொள்கைகளை எதிர்க்கும் புரட்சிகரசக்திகள் இந்த பசப்பல்களுக்கு மயங்கிவிடப் போவதில்லை! போராட்டங்களை நிறுத்திவிடப் போவதுமில்லை!

தனி இதழ்: ரூ 1
ஆண்டு சந்தா: ரூ 24

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை-600 015.

படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளையடித்த ராஜீவ் கும்பலுக்கு உத்தமர் வேடம் போடும் முயற்சி

"அந்நியச் செலாவாணித் திருடர்கள், கடத்தல்காரர்கள் மற்றும் அனைத்து பிற்போக்கு. சமூக விரோத சக்திகளின் சொர்க்கமாக சுப்ரீம் கோர்ட் ஆகிவிட்டது... பணம் படைத்த வர்க்கத்திடம் தனக்கு உள்ள பாசத்தை சுப்ரீம் கோர்ட் மறைத்துக் கொள்வதுகூட இல்லை. வெளிப்படையாகவே காட்டுகிறது" என்று மத்தியசட்ட அமைச்சர் சிவசங்கர் உச்சநீதி மன்றத்தின் யோக்கியதையை ஒரு பொதுக்கூட்டத்தில் போட்டு உடைத்தார். தமக்கெதிரான முணு முணுப்பைக்கூட கேட்கச் சகிக்காமல் பாசிஸ்டுகள் போடும் எதிர்க் கூச்சல் பல சந்தர்ப்பங்களில் சுவையான உண்மையாகி விடுகிறது.

சிவசங்கர் பேசி ஒரு வாரம் கூட ஆகியிருக்காது. அந்நியச் செலாவணித் திருடர்களின் சார்பில் ஆஜராகியிருக்கிறார்கள் தாக்கர்—நடராசன் என்ற இரு உச்சநீதிமன்ற நீதிபதிகள். கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணியை சுருட்டிய ரிலையன்ஸ் அம்பாணி, அமிதாப், அஜிதாப் ராஜீவ்கும்பலை ஒரு சிறிய காயம்கூடப் படாமல் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்டு 270 பக்கத்தில் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது ராஜீவ் அரசால் நியமிக்கப்பட்ட தாக்கர்—நடராஜன் கமிஷன்.

ஃபார் பாக்ஸ் என்னும் வெளிநாட்டு தனியார் துப்பறியும் நிறுவனத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்த சூழ்நிலைகள் என்ன என்பதை ஆராயப்புகுந்த இந்தக் கமிஷன் 'இந்தியாவின் பாதுகாப்பு', 'அரசியல் ஸ்திரத் தன்மைக்கு ஏற்படக்கூடிய ஆபத்து' போன்ற காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானங்களை வெகு சிரமத்துடன் வேறு நடையில் எழுதிக் காட்டியிருக்கிறது.

ஃபார் பாக்ஸ் விவகாரமும் அதன் தொடர்ச்சியாக விபி சிங் கோஷ்டியினர் கட்சியிலிருந்து வெளியேறியதும் வெளியேற்றப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததுதான். விசாரணைக் கமிஷன்கள் என்னும் சவப்பெட்டிக்குள் எழும்பி வெடிக்கின்ற பிரச்சினைகள் அனைத்தையும்வைத்துபுதைத்து விடுவதும் இந்திய அரசியலில் புதியதல்ல. அந்த வகையில், விசாரணைக் கமிஷன் போடும்போதே விசாரணை எப்படி இருக்கும் என்பதை எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பலரும் அறிந்துதான் இருந்தனர்.

அந்நியச் செலாவணித் திருடர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக வெளிநாட்டு துப்பறியும் நிறுவனத்தை நியமித்த 'சூழ்நிலை'களை ஆராய்வதுதான் கமிஷனின் பணி என்று ராஜீவ்கும்பல் உத்தரவிட்ட போதே கமிஷனின் அறிக்கை என்னவாயிருக்கும் என்பது விளங்கி விட்டது.

ஆனால் இப்போது பிரச்சினை அதுவல்ல; ஏற்கனவே வெட்டிச் சிதைத்து மூண்டமாக வைக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் சட்டத்தின், இருக்கின்ற உப்பு சப்பில்லாத ஷரத்துகளும்கூட கமிஷனால் மீறப்பட்டிருக்கின்றன என்பதுதான்.

விசாரணைக் கமிஷன் சட்டத்தின் பிரிவு'8B-இன்படி கமிஷனில் சாட்சியமளிப்பவர்களுக்கு மற்ற சாட்சிகளை அழைக்கவும், குறுக்கு விசாரணை செய்யவும் வாய்ப்பு தரப்பட வேண்டும். ஆனால் பாம்பே டையிங் முதலாளி நுஸ்லி வாடியாவைத் தவிர மற்ற சாட்சிகளான வி.பி.சிங்கிற்கும், பூரேலால், வினோத் பாண்டே போன்ற அதிகாரிகளுக்கும் இந்த வாய்ப்பு திட்டமிட்டே மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் விசாரணையிலிருந்து தாக்கர், —நடராஜன் கமிஷன் ராஜீவைப் பாதுகாத்திருக்கிறது. அதன் பின் நடத்தப்பட்ட விசாரணை நாடகத்தின் இறுதியில் அருவறுக்கத்தக்க அளவுக்கு பொய்களும், கைகொட்டிச் சிரிக்குமளவு உளறல்களும், அதிர்ச்சியால் வாயடைத்துப் போகுமளவு பொய்களும் நிரம்பிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

இதற்கு முன்பு இதைப் போல வெளிநாட்டு நிறுவனங்கள் இவ்வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது மட்டுமல்ல; தூதரகங்களிலும் வெளிநாட்டு அரசுகளிலும் உள்ள அதிகாரிகள் பெருந்தரகு முதலாளிகளின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கியிருப்பவர்கள் என்பதால் அவர்கள் மூலம் இம்மியளவு தகவலைக்கூட சேகரிக்கமுடியாது என்பதே உண்மை. இதை அறியாத சிறுபிள்ளையைப் போல நடிக்கிறது கமிஷன். போபார்ஸ் பீரங்கி பேரத்தில் ஸ்விஸ் வங்கியில் போடப்பட்டுள்ள கோடிக்கணக்கானருபாயை முடக்கவோ, வெளிக் கொண்டு வரவோ ராஜீவ் அரசு என்ன முயற்சி எடுத்தது என்பதை கமிஷனின் நீதிபதிகள் யோசிக்க நியாயமில்லைதான்.

ரிலையன்ஸ் அம்பானியின் திருட்டு சம்பந்தப்பட்ட ரகசியங்களையே தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ரகசியங்களாகச் சித்தரிக்கிறது கமிஷன். உண்மையைச் சொல்லப்போனால் இந்திய அரசின் உளவு நிறுவனங்கள் பழைய உளவுத் தகவல்களை பழைய புத்தகக் கடையில் வாங்குவதைப் போல அமெரிக்க, பிரிட்டிஷ் உளவு நிறுவனங்களிடம் இன்றளவும் வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தியாவின் பாதுகாப்பு ரகசியங்களை விற்பனை செய்யும் உரிமையை இந்திய ராணுவ அதிகாரிகள் மொத்தக் குத்தகைக்கு எடுத்திருப்பதும் மெத்தப்படித்த இந்த நீதிமான்களுக்குத் தெரியாததல்ல;

பார்பாக்ஸ் நிறுவனத்தை வேலைக்கு அமர்த்தவில்லை என்பதும் பொருளாதார மோசடி குறித்து துப்பு தருபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட சதவீதம் சன்மானம் தரப்படும் என்ற பொதுவிதியின் அடிப்படையில் தான் பார்பாக்ஸ் பயன்படுத்தப்பட்டது என்பதும் எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால் இந்நிறுவனத்தை வேலைக்கு அமர்த்த எழுத்துபூர்வமாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் வாய்மொழியாகவே அப்போதைய நிதிஅமைச்சர் வி.பி. சிங் உத்தரவிட்டிருக்கிறார் என்று அவரைக் குற்றம்சாட்டு


ராஜீவ்


அமிதாப்


அம்பாணி


தாக்கர்


நடராஜன்

கொள்ளையர்களும் அவர்களுக்கு உத்தமர் வேஷங்கட்டிய எடுபிடிகளும்



படிப்பகம்

www.padippakam.com




போட்டி முதலாளித்துவ கும்பல்தான். ஆனால் குற்றம்சாட்டிய இவர்களோ குற்றவாளிகளாக்கப்பட்டனர்.

கிறது கமிஷன். ஆனால் வாய்மொழியாக பிரதமரின் ஒப்புதல் பெறப்பட்டதாகவும், பாராளுமன்றத்திலேயே பார்பாக்ஸை நியமிக்கின்ற தனது முடிவுக்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது என்றும் பதிலடி கொடுக்கிறார் வி.பி. சிங். ஒரு வாதத்திற்கு பார்பாக்ஸை நியமித்தது தவறு என்று வைத்துக்கொண்டாலும், ஆக தெரிந்தபின் 4 மாத காலம் நிதியமைச்சர் பொறுப்பை வகித்த பிரதமர்மீது கமிஷன் குற்றம் சொல்லாத காரணம் என்ன?

பார்பாக்ஸ் தலைவர் ஹெர்ஷ்மேனுக்கும் சி.ஐ ஏவுக்கும்தொடர்பு, நுஸ்லி வாடியாவின் தூண்டுதலுக்கு இணங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை, அரசு அலுவல்களில் வெளியாரின் தலையீடு என்று ஆயிரம் விஷயங்களை அடுக்கும் இந்த அறிக்கை அந்நியச் செலாவணியைக் கோடிகோடியாகக் கடத்திய அம்பானியைப்பற்றி மூச்சு விடவில்லை.

பிற்போக்கு பத்திரிகைகளின் குருபீடமான 'இந்து' நாளேடேகேலி செய்யுமளவு தாக்கர்—நடராஜன் கமிஷன் அறிக்கை வெளிப்படையாக ராஜீவ் கும்பலுக்கு ஒத்து ஊதியிருக்கிறது.

காங்கிரஸ் பாராளுமன்றக் கமிட்டியின் செயற்குழுவில் பேசிய முன்னாள் அமைச்சர் என்.கே.பி. சால்வே, "எனது தலைமையில் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அளித்த சாட்சியத்தின் அடிப்படையிலேயே தாக்கர்—நடராஜன் கமிஷன் அறிக்கை அமைந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது" என்று பேசி விட்டு அதை விளக்கத் தொடங்கினாராம். உடனே காங்கிரஸ் பொதுச் செயலர் குலாம் நபி ஆசாத் குறுக்கிட்டு "இந்த விஷயத்தில் நமது பங்கு குறித்து நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்றாலும் இப்படி வெளிப்படையாகப் பேசினால் மக்கள் தவறாக நினைத்துக் கொண்டு விடுவார்கள்"—என்று சொல்லி சால்வேயை உட்கார வைத்தாராம்.

ஆக—இதுதான் தாக்கர்—நடராஜன் கமிஷன் அறிக்கையின் யோக்கியதை. விசாரணைக் கமிஷன்கள் மட்டுமல்ல; நீதிமன்றம், பாராளுமன்றம், நிர்வாக எந்திரம், ஜனநாயக உரிமைகள் ஆகிய அனைத்திலும் ஏற்கனவே தனது மூதாதையர்களால் உருவாக்கி வைக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கே புதுவிளக்கம் கொடுத்திருக்கிறது ராஜீவ் கும்பல்.

'சகிப்புத்தன்மை' என்ற வார்த்தை சாத்தானால் உருவாக்கப்பட்டது' என்றான் ஒரு பாசிஸ்டு. சென்ற மே மாதம் டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டமொன்றில் பேசிய ராஜீவ் "மென்மையான கையுறைக்குள்ளே இரும்புக்கை இருக்கிறது. கையுறையின் காரணமாக பிடியை இறுக்க முடியவில்லை என்றால் உறையைக் கழற்ற வேண்டியதுதான்" என்று தனது உண்மை முகத்தை வெளிக்காட்டினார்.

கடந்த சில வாரங்களாக ராஜீவ் கும்பல் எடுத்து வரும் நடவடிக்கைகள் எதிர்வரும் பாசிச அபாயத்திற்குக் கட்டியம் சொல்கின்றன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் டெல்லி அலுவலகத்தின் மனை அரசாங்கத்திற்குச் சொந்தமானது. எக்ஸ்பிரஸும் மற்றும் பல பத்திரிக்கைகளும் அந்தநிலத்தை குத்தகைக்கு எடுத்து கட்டிடங்கள்கட்டியுள்ளன. அவ்வாறு கட்டப்படும் கட்டிடங்களில் பத்திரிக்கை அலுவலகம் தவிர வேறெதுவும் இயங்கக்கூடாது என்பது குத்தகை ஒப்பந்தத்தின் ஒரு விதி. அந்த விதியை எல்லா பத்திரிக்கைகளுமே மீறியிருக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் நேஷனல் ஹெரால்டு பத்திரிக்கை உள்பட. ஆனால் உடனே கட்டிடத்தைக் காலி செய்யவேண்டுமென்று எக்ஸ்பிரஸ் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது ராஜீவ் அரசு. அது மட்டுமல்ல; எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் செய்தித்தாள் காகித கோட்டா கடந்த சில மாதங்களாக கொடுக்கப்படவில்லை. அனைத்துத் தொழிலதிபர்களையும் போலவே வரி ஏய்ப்புகளில் ஈடுபட்டிருந்தாலும் கோயங்காமீது மட்டும் தாக்குதல் ஒருமுனைப்படுத்தப்பட்டிருக்கிறது.


உத்தரப் பிரதேசத்தில் வி.பி. சிங் ஆதரவு எம்எல்ஏக்கள் என்று சந்தேகிக்கப்படுகின்ற 17 பேரை பல்வேறு கமிட்டிகளிலிருந்தும் விலக்கிவிட்டது ராஜீவ் கும்பல்.

காங்கிரஸ் கட்சி எம்.பியும் தற்போதைய வி.பி. சிங் ஆதரவாளருமான ராம்தன் பாராளுமன்றத்தில் பேச எழுந்தபோது பாராளுமன்ற காங்கிரஸ் கட்சிக் கொறடா எச். கே. எல். பகத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் பேசுவதைத் தடுத்து இந்தியப் பாராளுமன்ற வரலாற்றில் புது அத்தியாயம் படைத்தார்.

ஜனநாயகத்தின் தூண்கள் என்று ஆளும் வர்க்கத்தால் போற்றப்படும் அனைத்தையும் ராஜீவின் பட்டாளம் இடித்துத் தரைமட்டமாக்குகிறது.

"நாடாளுமன்றத்திற்கு எதிராக போனபார்ட்டின் வெற்றி, சட்டமன்ற அதிகாரத்துக்கு எதிராகநிர்வாக அதிகாரத்தின்வெற்றி, சொற்பொழிவு சக்திக்கு எதிராகச் சொற்பொழிவே இல்லாத சக்தியின் வெற்றி" என்று மார்க்ஸ்குறிப்பிடுவது இன்றைய அரசியல் நிலையை அப்படியே படம் பிடிக்கிறது. போனபார்ட்டிற்கு பதிலாக ராஜீவ் காந்தி! ●

நீதிபதி தாக்கரின் வீடு. இங்குதான் சதி போல விசாரணை நடந்தது.



www.padippakam.com

# அமைதிப்படையின் அருவெறுக்கத்தக்ககோரமுகம்

**"ஈழத்தில் அமைதி திரும்பிவிட்டது. தமிழகத்தில் உள்ள அகதிகளை திருப்பி அனுப்பப் போகிறோம்" என்றுஅறிவித்திருக்கிறது இந்திய அரசு. இந்திய—இலங்கை ஒப்பந்தம் மூலம் அமைதி திரும்பிவிடும் என்று நம்பி செப்டம்பர் இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு திரும்பினார் வெளிநாட்டில் வாழும் ஒரு யாழ் தமிழர். ஆனால் அவரது கனவுகளைச் சிதைப்பதற்கென்றே இந்திய ராணுவம் அங்கே காத்திருந்தது. இந்திய ராணுவத்தின் கொலை வெறியாட்டத்திலிருந்து உயிர் தப்பி டிசம்பர் முதல் வாரத்தில் இந்தியா வழியே மீண்டும் வெளிநாடு சென்றுவிட்டார்.**

**கடந்த இரண்டு மாதங்களில் அங்கே தான் கண்ணெதிரே கண்டவற்றையும், கேட்டவற்றையும், அனுபவித்தவற்றையும் விவரிக்கிறார். அதன் சுருக்கத்தைத் தருகிறோம். அவருடைய பெயரையும் புகைப்படத்தையும் வெளியிட இயலாத காரணம் வாசகர்கள் அறிந்ததே.**

## தப்பிவந்த யாழ்த்தமிழர் பேட்டி

செப்டம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு நான் பயணமானேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் திலீபன் 5 அம்சக் கோரிக்கையை வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த செய்தி அப்போதுதான் வருகிறது.

அக்டோபர் 5 அன்று, 17 பேரும் சைனைட் அடித்த செய்தி வந்தபோது நான் பண்டத்தரிப்பு என்ற இடத்தில் இருந்தேன். மக்கள் மீண்டும் பிரச்சினைவந்துவிடும் என்று எண்ணினார்கள். மரணமடைந்த 12 பேரின் உடல்கள் அடுத்த நாள் கொடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளால் நல்லடக்கம் செய்யப்பட்டன.

திலீபனின் மரணம் போன்று இதற்கு அவ்வளவாக மக்கள் கூட்டம். வரவில்லை? காரணம் ஆதரவில்லை என்பதல்ல—பின்பு நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் குறித்த பயமே காரணம் எனலாம்.

அடுத்த நாள் புலிகள் தரப்பில் மக்கள் ஊர்வலம் ஒன்று பலாலிக்குச் சென்று அங்குள்ள இந்திய இராணுவ முகாமில் மகஜர் ஒன்றைக் கையளித்தது. ஆனால் மகஜரை அங்குள்ள அதிகாரிகள் ஏற்கவில்லை. மேலும் பலாலிக்குச் செல்லும் வழியிலெல்லாம் இந்திய இராணுவ சென்றிகளைத் தாண்டியே சென்றார்கள். அங்குள்ள இராணுவத்துக்கும் தெரிந்தது—"தமக்கும் இந்த மக்களுக்கும் பிரச்சினை வரப் போகிறது" என்று;மகஜர் ஏற்றுக் கொள்ளப் படாததால் மக்கள் கல்லெறிந்தார்கள். உடனே துப்பாக்கிச் சூடு நடந்தது. மக்கள் நேர் சாலைகளில் அல்லாமல் தெல்லிப்பளை வழியாக தம் வீடுகளுக்கு ஓடினார்கள்.

அதே சமயம் யாழ்ப்பாண நகரத்திலும் சூழ்நிலை மாறிவிட்டது. சமாதான நிலையிலிருந்து போர் நிலைமை உருவாகுகிறது என்பது மக்களுக்குத் தெரிந்துவிட்டது.

புலிகளுக்கும் இராணுவத்துக்கும் கடுமையான சண்டை மூண்டது. இருதரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர் என்ற செய்தியும் வந்தது. இச்சமயத்தில் நான் சுமார் 10,000 ஜனத்தொகை கொண்ட ஊர்காவற்துறை (கயட்ஸ்) தீவுக்கு வந்துவிட்டேன். மூளாய்க்கும், காரைநகர் கடற்படைத் தளத்துக்கும் இடையிலிருந்த பாலத்தைப் புலிகள் வெடி வைத்துத் தகர்த்துவிட்டனர். பின்னர் கடற்படைத் தளத்திலிருந்த சிங்கள நேவியும், மக்களும் மண்ணைப்போட்டு, அந்தப் பாலத்தை மீண்டும் போட்டு உணவுப் பொருட்களைத் தீவுக்கு மக்கள் கொண்டு வந்தனர். தீவில் கடுமையான உணவுப்பஞ்சம் நிலவியது. பாலம் வழி வந்து கொண்டிருந்த ஒரு உணவுப் பொருள் வேனை இந்திய ஹெலிகாப்டர்கள் சுட்டதில், 7 வியாபாரிகள் மாண்டனர். தீவில் அரிசி விலை ரூபாய் 17லிருந்து ரூபாய் 87 ஆகிவிட்டது.

ஒரு நாள் கடுமையானமழைக்குப்பிறகு காலை ஆறு மணியிலிருந்தே ஏகப்பட்ட ஹெலிகாப்டர்களில் இந்திய இராணுவம் வந்திறங்கியது. திடீரென்று காரைநகர் தளத்திலிருந்து செல்லிங் (குண்டு வீச்சு) துவங்கியது. அரைமணி நேரத்துக்கு ஒரே புகையாயிருந்தது. ஜனங்கள் ஓடத் துவங்கி விட்டார்கள். கோயில்களுக்குள் புகுந்துவிட்டார்கள். ஆறு கோயில்களுக்குள் புகுந்த மக்களை இராணுவம் சுற்றி வளைத்தது. அன்றிரவு தொடர்ந்து நடந்த செல்லிங்கில் 35 தீவுவாசிகள் கொல்லப்பட்டனர். பின்பு இராணுவத்தால் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார்; கய்ட்ஸ் தீவில் புலிகள் யாருமே இல்லை என்றாலும் கைப்பற்றியதாக இந்திய வானொலி கூறியது!

நாங்கள் இருந்த கோயிலுக்குள் 50 இராணுவத்தினரும் ஒரு கமாண்டரும் வந்தார்கள். கமாண்டர் பேசுவதற்கு முன்பு துருப்புக்கள் ராக்கெட்—லாஞ்சர்களை குறி வைத்து அமைத்தார்கள். கமாண்டர் கூறினார்; "நாங்கள் சிங்கள இராணுவத்துடன் சண்டை பிடிக்கத்தான் வந்துள்ளோம். ஆனால் விடுதலைப்புலிகள் இப்போது தகராறு செய்கிறார்கள். அவர்களோடுதான் எங்களுக்குப் பிரச்சினை. மக்களுடன் அல்ல. ஆனால் உங்களில் யாராவது ஒருவர் (விடுதலைப் புலி) என்னைப் பார்த்துச் சுட்டால்எல்லோர்மீதும் ஹெலிகாப்டர் மூலம் மழைமாதிரி குண்டு பொழிவோம். எனவே அமைதியாக இருங்கள். அமைதிதான் எங்களுக்கும் வேண்டும்" என்று பிரசங்கம் செய்தார்

"உங்களுக்குள்ளும் விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள். ஆயுதமிருந்தால் கொடுத்து விடுங்கள்" என்றார். பின்பு எங்களில் இரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு சென்றார்கள். வழி தாண்டியதும் உதைத்து விட்டுவிட்டார்கள். நிறைய பேர் தண்ணீரை அள்ளி அள்ளி குடித்தார்கள். ஒவ்வொரு ஆளும் 75 கிலோவுக்கு ஆயுதங்கள், கிரனேடுகளைத் தூக்கிச் செல்கிறார்கள். சேற்றிலும், சகதியி



படிப்பகம்

www.padippakam.com

லும் இவர்கள் மார்ச் செய்து கொண்டு போவது பயங்கரமாக இருந்தது.

9இரவு மணிக்கு யாரோ ஒருவர் வந்து சொன்னார். ''ஒரு இந்திய இராணுவம்(ஒரு சிப்பாய்) நிக்குது'' காட்டில் நடந்து போகும்போது வழிதவறிவிட்டார் போலும். ஜனங்கள் அவரைச் சுற்றி வளைத்தார்கள். அவர் பேசவாரில்லை. மொழியும் தெரியவில்லை. ஜனங்கள் அவரை என்ன செய்வது என்று புரியாமல் அவரைக் கேட்டார்கள். பய உணர்ச்சியில் சுட ஆரம்பித்தார்—வானத்தில்! ஜனங்கள் உடனே காரைநகர் உதவி கலெக்டரை அணுகி அவரைப் பேசச் சொன்னார்கள். மூன்று நாட்களாகச் சாப்பிடவில்லை என்று ஆங்கிலத்தில் சொன்னார். மக்கள் அவருக்கு சோறு கொடுத்தார்கள். இடையில்அவர் இருப்பது தெரிந்து மோட்டார் சைக்கிளில் புலிகள் இவரைப் பிடிக்க வந்து விட்டார்கள். ஜனங்கள் புலிகளைத் தடுத்து, இவரைக் கொன்றால் ஆயிரக்கணக்கான துருப்புக்கள் வந்து விடுவார்கள் என்பதால் வேண்டாம் என்று சொன்னார்கள். ''படகில் ஏற்றிக் கொண்டு போய் உங்களை இந்திய ராணுவ முகாமில் விட்டு விடுகிறோம்'' எனறு ஜனங்கள் சொன்னார்கள். ''படகில் யார் போனாலும் இந்திய ராணுவம் சுடும். எனவே படகில் வரமாட்டேன்'' என்றார் அந்த சிப்பாய். சரி, இலங்கை ராணுவ முகாமில் கொண்டுபோய் விட்டு விடலாம் என்றால் அவர்களும் தன்னைக்கொன்றுவிடுவார்கள் என்று பயந்தார்.

கடைசியில் அவரை இலங்கை இராணுவத்திடம் ஜனங்கள் ஒப்படைத்து விட்டார்கள்! இப்போதும் அவரை நினைத்தாலே பரிதாபமாக இருக்கிறது. யாழ்ப்பாணத்துப் போர்பற்றிச் செய்திகள் எங்களுக்கு வர ஆரம்பித்தன. வடமராச்சிப் பகுதி முழுவதுமே ஊரடங்குச் சட்டம் போட்டு விட்டார்கள் என்றும் தெரிந்தது. கொக்குவில்—திருநெல்வேலிப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் புலிகள் ஐந்து நாட்கள் தாக்குப்பிடித்து 45சீக்கிய இராணுவத்தினரையும், 65 கூர்க்காக்களையும் கொன்றாகத்தெரிந்தது. கொக்குவில்லிருந்து கடைசியில் புலிகள் வெளியேறிச் செல்வதையும் நான் யாழ்ப்பாணத்துக்கு வந்தவுடன் பார்த்தேன்.

இடையில் கய்ட்ஸ் தீவில் உணவுப்பிரச்சினை கடுமையாகி விடவே யாழ்ப்பாணத்துக்குப் போய்விடுவது என்ற முடிவுக்கு வந்தோம். நெடுந்தீவில் நான்கு குடும்பங்கள் பட்டினியால் செத்ததாக அங்கிருந்து வந்த ஒருவர் சொன்னார். நைனாத்தீவில் இலங்கைக்கடற்படையினர் தமது உணவு ரேசனைக் கொடுத்து உதவியதாகவும் தெரிந்தது. கடைசியில் நாங்கள் கிளம்பும் முன்பு கொஞ்சமே உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தன.

யாழ்ப்பாணக்குடா நாட்டைப் பொறுத்தவரையில் இந்திய இராணுவம் வைத்ததே சட்டம்! சைக்கிளில் சென்றால்கூட இராணுவத்தினரைப் பார்த்தவுடன் தள்ளிக் கொண்டுதான் போக வேண்டும். சிறிய தண்டனை—2 மணி நேரம் வெயிலில் நிற்க வேண்டும்; அல்லது வயதானவர்களாக இருந்தால் உட்காரலாம். அடி—உதைகள் நிறைய உண்டு. செக்கிங் என்ற பெயரால் அடையாள அட்டையை போவோர்—வருவோரிடம் வாங்கிப் பார்க்கிறார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்டால் ஒழித்து விடுவோம் என்று ஜனங்களை மிரட்டுகிறார்கள். செக்கிங்கின் போது கைகளை வேறு உயர்த்திக் கொண்டே நிற்க வேண்டும்!

ஒவ்வொரு சந்திப்பிலும் பல வகையான இராணுவத்தினர் நிற்கின்றனர். பலமொழிகள் பேசுவதால் குழப்பம். இராணுவத்திலிருந்த தமிழர்களை செப்டம்பர் மூன்றாம் வாரத்துக்குப் பின் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றி விட்டதாகத் தெரிந்தது. மாலை நாலிலிருந்து அடுத்தநாள் காலை 6மணி வரையிலும் ஊரடங்குச் சட்டம். உலகச் செய்திகள்தெரிவதெல்லாம் வானொலி மூலம்தான். அகில இந்திய வா



யாழ்நகரில் 'அமைதிப்படை'யின் காப்பரண் வலுவாக்கப்படுகிறது

## பத்திரிக்கை சுதந்திரத்தின் பவிசு!

'இந்தியா டுடே' ஆங்கில இதழைச் சேர்ந்த பெண் பத்திரிக்கையாளர் அனிதா பிரதாப் இந்திய இராணுவம் பத்திரிக்கையாளர்கள் யாரையும் அனுமதிப்பதில்லை என்பதால் ரகசியமாக, உள்ளூர் மக்களைப்போல மாறுவேடமணிந்து சென்று யாழ் நகரில் இந்திய ராணுவம் இழைத்துள்ள கொடுமைகளை நேரில் கண்டு புகைப்படங்களும் எடுத்திருக்கிறார். சோதனை என்ற பெயரில் மற்ற தமிழ்ப் பெண்களெல்லாம் எத்தகைய அவமானங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனரோ அத்தனைக்கும் இவரும் ஆளாகியிருக்கிறார். புலிகள் தலைவர் பிரபாகரனை நேரில் கண்டு பேட்டி எடுத்திருக்கிறார். கொழும்பு வழியாக இந்தியா திரும்பும்போதுஇலங்கை போலீசின் சோதனையில் இவரிடமிருந்த பெரும்பாலான புகைப்படங்கள் பறிக்கப்பட்டுவிட்டன.

மீதமிருந்த புகைப்படங்களும், இராணுவக் கொடுமை பற்றிய செய்திகளும், பிரபாகரனின் பேட்டியும் இந்தியா டுடே இதழால் பிரசுரிக்கப்படவில்லை. அனிதா பிரதாப் திரட்டிய செய்திகளை சிதைத்து குற்றுயிரும் கொலையுயிருமாக ஒரு கட்டுரையாக்கி வெளியிட்டிருக்கிறது இந்தியா டுடே ஏடு.

இப்போது அனிதா பிரதாப்பின் கட்டுரை அமெரிக்க 'டைம்' வார இதழில் வெளிவர உள்ளதாக சென்னை பத்திரிக்கையாளர் ஒருவர் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com

னொலியை நம்புவாரில்லை. பிபிசி, வெரித்தாஸ் தான் கேட்போம். மின்சாரமுமில்லை. மக்கள் வீடுகளை விட்டுவிட்டுத் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, என்ன தான் நடக்கும், பார்த்து விடுவோம் என்று திரும்பிவந்து விட்டார்கள். பாதி நேரமும் பட்டினி. வெளியே போகவும் இயலாது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களைப் பிடிக்க கையில்வரைபடங்களை எடுத்துக் கொண்டு வீடு வீடாக வந்து சோதனையிடுகிறார்கள். சோதனை என்று வந்துவிட்டால் என்ன செய்வதென்றே தெரியாமல் பின் கதவுகளைத் திறந்து கொண்டு அந்தப் பக்கத்து மக்கள் ஓடி விடுவார்கள்.

## இந்திய இராணுவம் 25 வருடங்களுக்குப் போகமாட்டார்கள் என்றே மக்கள் நினைக்கிறார்கள்

ஓடுபவர்களையும் பயங்கரமாகக் கெடுபிடி செய்கிறார்கள்.

சில நாள் யாழ்ப்பாண நகரிலிருந்து விட்டுக் கிளம்பும் வரையிலும் இராணுவம் உணவோ வேறு உதவியோ எதுவும் செய்யவில்லை. மக்கள் வீடு—வாழ்விழந்து தவிக்கிறார்கள். மீன்பிடித் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கரையிலிருந்து அதிக தூரம் செல்ல முடியாது. மண்டைத் தீவுக்கு அருகில் பெரிய போர்க்கப்பல் ஒன்றை நிறுத்தியுள்ளார்கள்; கடற்படை சுடும் அபாயம் உள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தேன். வழியெல்லாம் பல இடங்களில் இராணுவம் செக்கிங் நடத்தியது. யாழ்ப்பாணத்திலிருந்து எங்கு போக வேண்டுமென்றாலும் கச்சேரியில் முகாம் போட்டிருக்கும் இராணுவத்திடம் 'பாஸ்' வாங்க வேண்டும். கிளிநொச்சியில் ஒரு சர்ச் முன்பு இராணுவம் முகாம் போட்டிருந்தது. இரவு சர்ச்சில் தங்கி, பின்பு காலையில் வவுனியாவுக்கு பஸ் பிடிக்கத் திட்டமிட்டேன்.

கிளிநொச்சியில் இ.என்.டி.எல்.எஃப். (த்ரீ ஸ்டார் அமைப்பில் ஒன்று) ஆயுதங்களுடன் முகாம் அமைத்துள்ளனர். இந்திய இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்பாக உள்ளது. கிளிநொச்சிக்கு வந்தவுடன் யாரும் அவர்கள் முகாமுக்குப் போய் 'ரிப்போர்ட்' செய்ய வேண்டும். பிறகு அவர்கள் வழியில் வந்து போகும் பஸ், வண்டிகளையும் செக்கிங் செய்கிறார்கள்.

வவுனியாவுக்கு வரும்வழியில் மாங்குளத்துக்கு அருகே சுமார் 1500 சீக்கியர்கள் உள்ள பெரும் இராணுவ முகாமைப்பார்த்தேன். ஏராளமான ஆயுதங்களுடன் வரும் வழியிலெல்லாம் அவர்கள் நின்றிருந்தனர். இலங்கைப் போலீசாரும் கிளிநொச்சி தொடங்கி, இருக்கிறார்கள். கிளிநொச்சியில் இந்திய இராணுவமும் மாங்குளத்திலிருந்து இலங்கைப் போலீசாரும் செக்கிங் செய்கிறார்கள் இலங்கைப்போலீசாருக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் நல்ல உறவு இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அடுத்து பஸ்ஸில் வரும் வழியில் ஓமந்தை காம்ப் இருந்தது. அங்கே இருந்த வீடுகளையெல்லாம் இராணுவமே எடுத்துக் கொண்டு விட்டார்கள். எங்கள் வண்டியை நிறுத்தி ஆட்களை கடுமையான செக்கிங் செய்தார்கள். சட்டைகளைக் கழற்றிக் கடுமையாக உடலெல்லாம் தடவிப் பார்த்தார்கள். ஆண்கள், பெண்கள் தனித் தனியாக பிரிக்கப்பட்டு ஒரு கிலோ மீட்டருக்கும் மேலாக ஒருவர் பின்னால் ஒருவராக நடந்து சென்றோம். உடனே, வண்டியேறிய பின்பு ஐந்து நிமிடங்களிலே மீண்டும் செக்கிங்; பஸ்ஸுக்குள் வந்தும் செக்கிங்! கெடுபிடி!

வவுனியா நகரை வந்தடையும்போது ஏழு முறை செக்கிங் ஆகிவிட்டது. வழக்கமாக ஒன்றரை மணி நேரப் பயணத்துக்கு 6 மணி நேரமானது. வவுனியா நகரில் முழுமையாக இராணுவமே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இந்திய இராணுவம், இந்திய ரிசர்வ் போலீஸ், இலங்கை இராணுவம், இலங்கைப் போலீஸ் என்று ஒரே கூட்டம். நடுவில் 'த்ரீ ஸ்டார்' முகாம் வேறு! எல்லாக் கட்டிடங்களிலும் அவர்களே நிறைந்திருந்தார்கள்; பஸ் நிலையம் முழுவதும் இராணுவ வண்டிகளேஇருந்தன. இலங்கைப் போலீஸ் அதிகாரி கொப்பகடுவா மக்களிடையே பேசிவிட்டு அப்போதுதான் ஜீப்பில் போய்க் கொண்டிருந்தார். இராணுவ வண்டிகளே வவுனியா நகர வீதிகள் முழுமையிலும் இருந்தன. திருகோணமலையிலிருந்து இராணுவத் தளவாடங்களை எடுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும்!

அன்று மாலை நான்குமணியிலிருந்து காலை ஆறு மணி வரை ஊரடங்குச் சட்டம்— எனவே சீக்கிரமே மன்னார் வண்டியைப் பிடிக்கத் தலைப்பட்டேன். இலங்கை இராணுவம் ஆலங்குளத்தில் செக்கிங் நடத்தியது, ஏதோ கடமைக்காகத்தான் என்று பட்டது. அவர்களுக்கும் இந்திய இராணுவத்துக்கும் உள்ள முரண்பாடு கூர்மையடையலாம். முருங்கனில் த்ரீ ஸ்டார்ஆயுதங்களுடன் நின்று செக்கிங் செய்தார்கள்; போகும், வரும் வாகனங்களிடம் வரிக்கட்டணம் வேறு வசூலிக்கிறார்கள். மன்னார் நகருக்கு இலங்கைப் போலீஸ் செக்கிங்கைத் தாண்டி வந்தேன். மன்னாரை அடுத்த கிராமமான பேராலையில் தமிழ்மீனவர்களுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் நல்ல உறவு இருக்கிறது. "நாங்கள் டிசம்பர் முதல் தேதி போய் விடுவோம். அப்புறம் இந்திய இராணுவம் வந்து உங்களையெல்லாம் என்ன செய்யப் போகுதோ?" என்றார்கள். தலைமன்னாரில் த்ரீ ஸ்டார் காம்ப் ஒன்று உள்ளது. ஆயுதங்களுடன் வந்து போவோரை வழி மறிக்கிறார்கள். இந்திய போலீஸாராகவே த்ரீ ஸ்டார் செயல்படுகிறது!

கிழக்கு மாகாணத்திலிருந்து வந்தவர்களிடம் பேசினேன், சிங்களவர்களில் பெரும்பாலோர் இந்திய இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் நடந்த மோதலின் போதும், அதற்கு முன்பும் அங்கிருந்து ஓடி விட்டார்கள். அவர்கள் எல்லோரும் இன்று அகதிகள் ஆவார்கள். அவர்கள் பிரச்சினை வளர்ந்து பூதாகரமாகலாம். அவர்கள் திரும்பி வருவார்களா, மீண்டும் குடியமர்த்தப்படுவார்களா என்றெல்லாம் தெரியவில்லை. தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக என்றுவந்த இந்திய இராணுவம்அவர்களை இப்படிக் கொல்கிறது என்றால் நம்மை என்னவெல்லாம் செய்யுமோ என்று சிங்களவர்கள் அஞ்சி நடுங்குகிறார்கள். இந்திய இராணுவத்தின் கொடுஞ்செயல்கள் அவர்கள் காதுக்கு இராணுவம், போலீஸ், பத்திரிக்கைச் செய்தி மூலம் எட்டிவிட்டது!

கிழக்கு மாகாணத்தில் மூதூர் நகரில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த இனக் கலவரத்தால் இரண்டு சமூகங்களும் பாதிக்கப்பட்டன. அப்போது வழக்கமாக தமிழர்களுக்கு புனர்வாழ்வு உதவி எது

படிப்பகம்

வும் அளிக்காத சிங்களவர்கள் கொஞ்சம் உதவியதாகவும் தெரிய வந்தது.

புலிகள்மீது மதிப்பும், மக்களைத் தாக்குவதால்தான் இந்திய இராணுவத்தைத் திருப்பித் தாக்குகிறார்கள் என்ற நியாயமும் மக்களிடையே தென்பட்டன. பொதுவாக யாழ் நகரில் நிலை இதுதான். யாழ்ப்பொது மருத்துவமனையில் அநியாயமாக நோயாளிகள், டாக்டர்கள், தாதிகளை இந்திய இராணுவம் கொன்றதும் மிக பயங்கரமான செயலாகவே மக்கள் மனதில் பதிந்துவிட்டது. மருத்துவமனையை இராணுவம் தாக்குவதற்கான காரணமே இல்லை என்பதும் புலிகள் எப்போதோ அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டனர் என்பதும் மக்களுக்குத் தெரிந்த விஷயங்கள்.

கொக்குவில், உரும்பிராய் பகுதிகளில் வீடுகள் தரைமட்டம்.

## யாழ்ப்பாணத்தில் ஒரு மீரட்!

யாழ் நகரில் இந்திய ராணுவம் நடத்திய வெறியாட்டங்கள் சிறிது சிறிதாக வெளி வந்து கொண்டேயிருக்கின்றன! யாழ் நகரில் முஸ்லீம் ஜனத்தொகை ஏறத்தாழ 8000. இவர்களில் 90 சதவீதம் பரம ஏழைகள். முஸ்லீம் தெருவில் புகுந்த சீக்கிய, கூர்க்கா ரெஜிமெண்டுகள் கண்ணில்பட்ட பெண்களையெல்லாம் கற்பழித்திருக்கின்றன. ஏராளமானோரை படுகொலை செய்திருக்கின்றன. உயிருக்கு அஞ்சி பள்ளி வாசலில் தஞ்சம் புகுந்தவர்களை அங்கேயே துப்பாக்கி சூடு நடத்திக் கொன்றிருக்கிறது இந்திய ராணுவம். இது நாள் வரை எவ்வித முரண்பாடும் இல்லாமல் இணக்கத்துடன் வாழ்ந்து வந்த இந்து—முஸ்லீம் மக்களிடையே பகைமையை விதைத்திருக்கிறது இந்திய ராணுவம். ராணுவத்தின் கொடுமை தாங்காமல் யாழிலிருந்து 120 கி.மீ தூரத்திலுள்ள புத்தளத்திற்கு கால் நடையாகவே தப்பிச் சென்றிருக்கின்றனர் யாழ் நகர முஸ்லீம் மக்கள்.

பெரும்பான்மையான முஸ்லீம்கள் வாழும் கிழக்கு மாகாணங்களில் முஸ்லீம் பெண்கள் தங்களது மத வழக்கப்படி பர்தா அணிந்து நடமாட முடிவதில்லை. அனைவரும் இந்துப் பெண்கள்போல உடையணிந்து நெற்றியில் பொட்டும் வைத்துக் கொள்கிறார்களாம்.

பாகிஸ்தான் எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு வெறியூட்டப்பட்ட இந்திய ராணுவம் ஈழத்திலும் தன் கோர முகத்தை வெளிக்காட்டியுள்ளது.


www.padippakam.com

சடலங்களை எடுக்க முடியாதவாறு இன்னும் அழுகிக் கொண்டிருக்கின்றன. யார் உயிரோடு இருக்கிறார்கள், யார் போனார்கள் என்பதே தெரியாத துயரத்தோடு மக்கள் வாழ்கின்றனர். இலங்கை இராணுவமாவது பல சமயங்களில் குறைந்தபட்ச நட்புறவுடன் வாழப் பழகியிருந்தது! இவர்களுக்கு எல்லோருமே எதிரிகள் தாம் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

யாழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது பெரிய இராணுவ முகாம் உள்ளது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, சுமார் 25 ஆண்டுகள் பின் தள்ளிப் போடப்பட்டு விட்டது. சரியான மருத்துவ வசதிகள், உணவுப் பொருட்கள், மின் வசதி எதுவுமே சரியாக இல்லை. இரவில் கும்மிருட்டு. இந்திய இராணுவத்தின் கெடுபிடி; பொய்களையே சொல்லும் அகிலஇந்திய வானொலிச் செய்திகள் வேறு. உதாரணமாக, விமானத் தாக்குதல் எதுவுமே செய்யவில்லை என்றுவானொலியில்சொல்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அகதிகள் முகாம்கள், பள்ளிகள் கல்லூரிகளில் குண்டு வீச்சு ஆரம்பித்து விட்டார்கள்! மேலும் பெருமளவு மக்களைக் கொன்று குவித்தவுடன், புலிகள் மக்களை ''மனிதக் கேடயமாக''ப் பயன்படுத்துகிறார்கள் என்றார்கள். மக்களில் குறைந்தபட்சம் 2000 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் இறந்திருப்பார்கள். இதில் அநேகம் பேர் ரத்த வெளியேற்றத்தால்(Bleeding)இறந்தவர்கள். கிழக்குமாகாணத்திலும்,பிறஇடங்களிலும் கூட பலர் இறந்துள்ளதாகவே செய்திகள் வந்தவண்ணம் இருந்தன! இந்திய இராணுவத்தினர் குறைந்தது 1000 பேர் செத்திருப்பார்கள்.

இந்திய அரசு தனது அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகத்தையும் கையில் எடுத்தது மக்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளது. இந்திய மத்திய அரசுதான் எல்லாம் செய்கிறது என்று மக்களுக்குத் தெரிந்தேயுள்ளது. இவ்வளவு அநியாயங்கள் நடந்தும்கூட தமிழ்நாட்டுக் கட்சிகள் என்ன செய்கிறார்கள் என்று அடிக்கடி கேட்கிறார்கள். இந்திய இராணுவத்தில் தமிழர்கள் முன்பு இருந்தபோது நடந்து கொண்ட விதம் நன்றாக இருந்ததால், தற்போது பிற இனத்தவர் படுமோசமாக நடந்து கொள்வதுஅவர்களுக்குத் நன்றாகத் தெரிகிறது.

இந்திய அரசு இராணுவத்தை வைத்துக் கொண்டு நுழைந்து விட்டது. இன்னும் 25 வருடங்களுக்குப் போக மாட்டார்கள் என்றே மக்கள் நினைக்கிறார்கள்.



விடுதலைப்புலிகளின் காட்டுப்பகுதி மறைவிடம் : கொரில்லாப்போர் !

புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அரசில் இடங்கொடுப்பதாக அவசர, அவசரமாகப் பெயர் பண்ணிவிட்டு தான் புகுந்து விடுவது என்றே இந்திய அரசு முன்னரே செயல்பட்டு வந்தது என்றும் பலர் நினைக்கிறார்கள்.

புலிகளின் 'ஈழ முரசு' பத்திரிகை அலுவலகம் தகர்க்கப்பட்ட சிலநாட்களிலேயே மீண்டும் அது சிறிய அளவில் வெளி வரத் தொடங்கியது. அவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை என்பதற்கு இது ஓர் உதாரணம். இன்னொரு உதாரணம், ''யாழ்ப்பாணம்கைப் பற்றப்பட்டது'' என்று இந்திய வானொலி அறிவித்தபோது, புலிகள்சிலர் தமது டிராக்டரில் அடிபட்ட இரண்டு டாங்குகளைக் கட்டி இழுத்துக் கொண்டு போனதாகும்!

● பெர்ணாண்டஸ்



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை: ராஜீவ்கும்பலின் புதியசூழ்ச்சிகள்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன் "அமைதியை நிலைநாட்டுவதற்காகத்தான் இந்தியா இத்தனை பாடு படுவதாக" வார்த்தைகளில் தேன் தடவிப் பேசிவந்த ராஜீவ் அரசின் பேச்சுக்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் ஆதிக்க வெறி விழுந்து தெறிக்கிறது.

"இந்த நடவடிக்கைக்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு காசும், பலியாகும் ஒவ்வொரு இந்திய சிப்பாயின் உயிரும் வீண் போகப் போவதில்லை. தெற்காசியாவின் வல்லரசாக இந்தியா முடிசூட்டிக் கொள்ள அவை பயன்படத்தான் போகின்றன. ஒப்பந்தத்தைநிறைவேற்றுவது என்பதெல்லாம் உடனடி நோக்கமாக இருக்கலாம். ஆனால் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இந்திய அரசால் கவனமாக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதிதான் இது" என்று ராஜீவ் அரசின் உயர் அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும் பேசுகின்றனர்.

ஆக கருணாநிதியும், வீரமணியும் சொல்வதுபோல ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சிக்கு இந்தியா பலியாகிவிடவில்லை. மாறாக, இந்தியாவின் சதித் திட்டத்திற்கு ஈழத் தமிழர்கள் இன்று பலியாக்கப்பட்டுள்ளனர். தமிழர் வாழும் பகுதிகளில் "அமைதியை நிலைநாட்டியவுடனே" இந்திய ராணுவம்திரும்பி விடப் போவதில்லை. அடுத்து ஏதாவதொரு முகாந்திரத்தைவைத்துக் கொண்டு சிங்களப் பகுதியை நோக்கி நகரும். இதற்கு ஆதாரம் தேட அதிகம் கஷ்டப்பட வேண்டியதில்லை. பெரும்பாலான தமிழ் நாட்டு மக்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல இந்திய ராணுவம் தமிழர் பகுதியில் மட்டும்முகாம் அடிக்கவில்லை. இலங்கைத் தலைநகர் கொழும்பு உட்பட பல்வேறு இடங்களிலும் காலூன்றிவிட்டது. இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சிகள், ராணுவம், போலீஸ் ஆகியோர் மத்தியில் இந்த அச்சம் வேர் விட்டுப் பரவத் தொடங்கிவிட்டது. "இன்று எங்களை நோக்கி திருப்பப்பட்ட இந்திய ராணுவத்தின் துப்பாக்கிகள் நாளை சிங்கள மக்களை நோக்கியும் திரும்பும்" என்று மாத்தையா குறிப்பிட்டது உண்மையென்பதும் இந்திய 'அமைதிப் படை' ஜெயவர்த்தனாவின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகிறது என்ற பேச்சு வெறும் பம்மாத்து என்பதும் சிங்கள மக்களுக்கும் புரிந்திருக்கிறது.

● வவுனியாவில் தமிழ்மக்கள் மத்தியில் பேசிய இலங்கை ராணுவ அதிகாரி கொப்பக்கருவ "நீங்கள் பயப்பட வேண்டாம். சோதனையிடுவதெல்லாம் நாங்கள்தான் செய்கிறோம். இந்திய ராணுவம்இங்கே வந்து அட்டூழியம் நடத்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இது இந்திய ராணுவ அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்கிறது.

● மட்டக் களப்பில் தமிழ் சிவிலியன்கள்மீது குண்டுவீசி படுகொலை செய்ததற்காக இந்திய ராணுவத்தினர்மீது சிங்கள போலீஸ் வழக்கு பதிவு செய்திருக்கிறது. இதனால் ஆத்திரமடைந்த இந்திய ராணுவத்தினர் சிங்கள போலீசை அடித்து நொறுக்கியிருக்கின்றனர்.

● தெற்குப் பகுதிக்கு இந்திய ராணுவம் வராவிடாமல் தடுக்க வேண்டும் என்பதால் புலிகளுக்கு ஆயுத சப்ளை கிடைக்க இலங்கை அமைச்சர்களில் சிலரே மறைமுகமாக உதவுகின்றனர்.

இவையெல்லாம் சிங்களர்கள் மத்தியில்ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தோன்றி வரும் கருத்தின் விளைவுகள். இலங்கை முழுவதையும் விழுங்கும் தனது திட்டத்திற்கு இடையூறாக எது வந்தாலும் அதை ராஜீவ் கும்பல் சகிக்கப் போவதில்லை. அதாவது இலங்கையில் 'அமைதி' திரும்பாமல் இருக்கும் வரையில்தான் இந்திய 'அமைதிப்படை' அங்கே இருக்க முடியும் என்பதால் அமைதியைச் சீர்குலைக்கும் அத்தனை வேலைகளையும் ராஜீவ் கும்பல் செய்யும். இதற்கு இந்திய உளவுத்துறை, எடுபிடிக் குழுக்கள், மற்றும் தமிழ், சிங்கள கைக்கூலிகளை ராஜீவ் கும்பல் பயன்படுத்தும்.

தமிழ்—சிங்கள இனக்கலவரம், இந்து—முஸ்லீம் கலவரம் ஆகியவற்றையோ அல்லது ஜெயவர்த்தனே அரசைக் கவிழ்க்க சதி, ஜே.வி.பி அபாயம் என்ற பெயரில் ஒரு நாடகத்தையோ ராஜீவ்கும்பல் இலங்கையில் அரங்கேற்றும். முஸ்லீம்களின் தற்காப்புக்கு ஆயுதம் கொடுக்கப் போகிறோம் என்ற இந்திய ராணுவத்தின் அறிவிப்பு இதைத்தான் காட்டுகிறது.

புலிகளுடன் ஒரு சமரசத்திற்கு வந்துவிட்டு பின்னர் தென் பகுதியை நோக்கி முன்னேறலாம் என்று திட்டமிட்டு இந்திய அரசு புலிகளுக்கு விட்ட தூது தோல்வி கண்டு விட்டது. "இந்திய ராணுவத்தை வாபஸ் பெறவேண்டும்" என்பதில் புலிகள் உறுதியாக இருந்ததால் குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றகதையாக, புலிகள் ஏதோ தூதுவிட்டது போலவும் இவர்கள் அதை நிராகரித்து விட்டது போலவும் பத்திரிக்கைகளுக்கு பொய்ச் செய்தி கொடுத்திருக்கிறது ராஜீவ்கும்பல்.

டெலோ, பிளாட், ஈஎன்டிஎல்எஃப், ஈபி ஆர் எல் எப் போன்ற கைக்கூலிகள் இந்திய ராணுவத்திற்கு ஆள்காட்டி வேலை செய்கிறார்கள். கிளி நொச்சியில் ஈ என் டி எல் எப் கைக்கூலிகள் 6 பேரை புலிகள் அழித்தொழித்திருக்கின்றனர். கைக்கூலிகளை மட்டுமல்லாமல் இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் அனைத்து சதிகளையும் விழிப்போடிருந்து முறியடிக்கவேண்டியது போராளிகள், இலங்கை மக்களின் கடமை.

யாழில் இந்திய ராணுவம் : பிடிரய இருக்கிறது !



படிப்பகம்

www.padippakam.com

# ஈழ ஆதரவு இயக்கங்கள்மீது பாசிச குண்டர்படையின் பாய்ச்சல்

"ஈழ ஆதரவு இயக்கங்கள்மீது மோகன்தாஸ்—தேவாரம் படை பாயும்" என்று ஏற்கனவே நாம் புதிய ஜனநாயகத்தில் எச்சரித்திருந்தோம். தமிழகத்தில் இன்று பாசிச எம்ஜிஆர் கும்பல்களால் இவ்வியக்கங்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தொடர்ச்சியான கொலைவெறி தாக்குதலும், அடாவடித்தனமான கருத்துரிமைமறுப்புகளும், மக்களின் அடிப்படையான செய்தி அறிவும் உரிமைகளும் அப்பட்டமாக மறுக்கப்படுவது அன்றாட நடைமுறை நிகழ்ச்சியாகிவிட்டது.

திராவிடர் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலை"யும்


நெய்வேலியில் பயங்கர மோதல்
இ.காங். பிரமுகருக்கு கத்திக்குத்து
3 தி.க. வினருக்கு சவுக்கு கட்டை அடி
இ.காங்கிரஸ் தி.க. மோதல்

"உண்மை" பத்திரிக்கையையும் சிறைக் கைதிகளுக்கு அனுப்புவதும்—கைதிகள் படிப்பதும் தடைச்செய்யப்பட்டுள்ளது. இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் போடப்பட்ட ரிட் மனுவும்நீதிமன்றத்தால் பரிசீலனைக்குஎடுததுக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்படுகிறது. தமிழகத்தில்கைக்கூலிகளால் பரவலாகதிடீர் கொள்ளைகள் அரங்கேற்றப்பட்டு அதற்கு புலிகள் இயக்கத்தினரே பொறுப்பு என்பதான விஷம பிரச்சாரம் ஒரு வானிலை அறிக்கை மாதிரி தினமும் வெளியிடப்படுகிறது.

இந்திய ராணுவத்தின் ஈழ ஆக்கிரமிப்பை ஆதரித்து பிரச்சாரம் செய்ய தெருத் தெருவாக கூலிப் பிரச்சாரகர்கள் மட்டுமல்ல கூலி அடியாட்படையும் களத்தில்இறக்கி விடப்பட்டுள்ளது. ஈழ ஆக்கிரமிப்பை எதிர்ப்பவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டிய சமூக விரோதிகள் என்ற எண்ணத்தை தமிழக மக்கள் மனதில் உருவாக்க பாசிச கும்பலின் ஒரு குண்டர்படையும் இறக்கி விடப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு கூலிப்படை நெய்வேலியில் ஈழஆதரவு இயக்கங்கள்மீது நடத்தியிருக்கும் வெறிதாக்குதல் பல படிப்பினைகளை நமக்கு உணர்த்துகிறது. கூலிப் படைக்கு எதிராக தற்காப்பு நடவடிக்கையில் இறங்குவது, அதற்கான தயாரிப்பில் ஈடுபடுவது அவசர அவசியமாகும். மேலும், மறுக்கப்படும் அடிப்படை சிவில் உரிமைகளுக்காக போராட திரண்டெழுவதும், அர்ப்பணிப்புதன்மையோடு மக்கள் மத்தியில் ஈழ ஆக்கிரமிப்பு எதிர்ப்பு பிரச்சாரத்தை இன்னும் ஆழமாக புதுப்புது வடிவங்களில் எடுத்துச் செல்வதும் நமது வரலாற்று கடமையாகும்.

*

நெய்வேலியில் விடுதலைப்புலிகள் தோழமைக் கழகம் என்றொரு அமைப்பு இயங்கி வருகிறது. அதில் இங்குள்ள தமிழர் பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழர் கழகம், திராவிடர் கழகம் ஆகியவற்றைச்சேர்ந்தவர்களும் மற்ற சிலரும்உறுப்பினர்களாய் உள்ளனர். இவர்கள் ஆரம்ப நாட்களிலிருந்தே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாய் செயல்பட்டு வந்தனர்.

சமீப நாட்களாக இந்திய அரசின் போக்கைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்தும், சுவரொட்டிகள் ஒட்டியும், பிரச்சாரம் செய்தும் வந்தனர். அரசாங்கக் கைகூலிகளும் இ.காங்கிரஸாரும் அதற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டனர். கடந்த சில தினங்களாக, அதாவது 27—11—87 முதல் சிறுபிரச்சாரக் கூட்டங்களை இவர்கள் (விடுதலைப் புலிகள் தோழமைக் கழகம்) நடத்தி வந்தனர். அதில் சுமார் இருபது பேர் கலந்து கொண்டு ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிரான கோஷங்களையிட்டும், இந்திய அமைதிப்படை ஈழத்திலிருந்து வெளியேறக் கோரியும்கோஷமிட்டனர். இந்நிகழ்ச்சியானது மக்கள் கூடும் இடங்களான மெயின் பஜார், புதுக்குப்பம் ரவுண்டானா, பொது மருத்துவமனை, எயிட் ரோடு, ஸ்டோர் ரோடு ஆகிய இடங்களில் நடைபெற்றன.



இந்நிகழ்ச்சியின், இறுதியாக 2—12—87 அன்று 9வது வட்டம் வாட்டர் டேங்க் அருகிலுள்ள சிறு கடைகளுக்கு முன்பாக பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது உள்ளூர் இ காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர்கள் சிவராமன், வீராசாமி, பண்ருட்டி வட்ட காங்கிரஸ் தலைவர் அசோகன் ஆகியோருடன் கொலை வெறி ஆயுதங்கள் ஏந்தியசுமார்50குண்டர்கள்சம்பவஇடத்திற்குவந்துகூட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களையும் அதில் கலந்து கொண்டவர்களையும் கொலை வெறியுடன் தாக்கினார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட ஐந்து பெண்மணிகளையும்கூட அவர்கள் அடித்து விரட்டினர். கூட்டத்தில் கோஷமிட்டுக் கொண்டிருந்த திராவிட கழகத்தைச் சேர்ந்த ஞானசேகர், ராஜாராம், மணிவண்ணன் ஆகியோரை பயங்கரமாகத் தாக்கி அருகிலிருந்த கடைகளையும் அடித்து நொறுக்கினர்.

நிகழ்ச்சி நடந்த சில நிமிடங்களுக்குள் அவர்களுடைய காரில் காவல் துறையினரை அழைத்து வந்து மேற்கண்டவர்களமீது புகார் செய்ததுடன், அவ்விடத்திற்கு நிகழ்ச்சி நடந்து முடிந்த முடிந்தபிறகு சென்ற திராவிட கழக நிர்வாகியான ஜெயராமன், கனகசபை ஆகியோரையும் கைது செய்து அழைத்துச் சென்று விட்டனர். அத்துடன் இந்த அராஜகச் செயலுக்குத் தலைமை தாங்கிய அசோகன் என்பவரை திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கியதாக ஜோடித்து விட்டனர். பின்னர் முன்பே திட்டமிட்டபடி அறிக்கைகள் விடுத்தும், கண்டனப் பேரணி நடத்தியும் இ. காங்கிரஸ் பிரமுகர்கள் பொய் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். அத்துடன் நில்லாது சம்பவத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஞான சேகரன் மற்றும் ராஜாராமை கொலை செய்யப் போவதாகக் கூறிக் கொண்டு நெய்வேலியில் வலம் வருகின்றனர். தமிழகத்தின் 'பிரபல்யமான' பத்திரிக்கைகளும் இச்சம்பவத்தைப்பற்றி செய்தி வெளியிட்ட விதம், அவர்களும் இ.காங்கிரசு குண்டர்களோ என்ற சந்தேகத்தை உருவாக்குகிறது.

**தகவல்:** வாசகர்கள்
நெய்வேலி



படிப்பகம்

www.padippakam.com

**டி**சம்பர் 5. டாக்டர் அம்பேத்கார் நினைவு நாள். தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் நாடு முழுவதும் நடத்தப்படும் நூற்றுக்கணக்கான அமைப்புகளின்—சுயமாக நியமித்துக் கொண்ட சாதிய பிழைப்புத் தலைவர்களுக்கோ கொண்டாட்ட நாள். புத்தாடை உடுத்தி, பேரணி நடத்தி அம்பேத்கார் சிலைகளுக்கு மாலை அணிவித்து அவர்கள் சுயவிளம்பரம் செய்து கொள்ளும் நாள். தாழ்த்தப்பட்ட மக்களை இரட்சிக்க வந்த இன்னொரு புத்தராக அவர்களால் சித்தரிக்கப்படுகிறார் அம்பேத்கார். அரசு பதவிகளுக்கான போட்டியில் பார்ப்பனர்களுக்கு எதிரான கூட்டணியில் பலம் சேர்த்துக் கொள்வதற்காக மேல்சாதி திராவிடக் கட்சிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

டாக்டர் அம்பேத்கார், தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புற்று புரட்சியில் குதிப்பதைத் தடுத்து சலுகைகளோடு சமாதானம் அடைய வைத்தார்; அவசியமான கட்டத்தில் தம்மோடு சேர்ந்து கொண்டு உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கான சட்டம் இயற்றித் தந்தவர் என்கிற விசுவாசத்தோடு 'தேசியவாதி'களும் நினைகூறத் தக்கவர் அம்பேத்கார். புரட்சியின் பக்கம் திரும்பும் தாழ்த்தப்பட்ட மக்களை திசை திருப்பும் நோக்கத்துடன் சாதிய உணர்வுகளைத் தூண்டி சாதிய அமைப்புகளில் இருத்தி முடக்கி வைப்பதற்கு இன்னும் தத்துவார்த்த ஆசானாக சாதியப் பிழைப்புவாதிகளால் பயன்படுத்தப்படுபவர் அம்பேத்கார்.

சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று என்பதை தங்களது நீண்டகால வரலாறாகவே கொண்டுள்ளவர்கள், இந்தியத் தலைவர்கள். ஒரு மனிதனைப் பற்றிய மதிப்பீடு 'அவன் என்ன சொன்னான் என்பது மட்டுமல்லாமல் அவன் வாழ்க்கையில் என்ன செய்தான்' என்பதிலிருந்தே வரையறுக்கப்பட வேண்டும். முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை உடைய அம்பேத்காரைப் பற்றி அவருடைய புத்தகங்களிலிருந்து புரிந்து கொள்வது கடினமானது. உதாரணமாக அரசும் சிறுபான்மையினரும் என்ற அவருடைய புத்தகத்தில் மிகவும் 'முற்போக்கான' கருத்துக்களைக் காணலாம். ஆனால் அவருடைய புத்தகங்களை மட்டுமின்றி அவருடைய வாழ்க்கையையும் இந்தக் கட்டுரையில் விவரிக்கிறார். கோபாட் காந்தி

## டாக்டர் அம்பேத்கார்:

# முதலாளித்துவ சீர்திருத்தவாதியா? புரட்சியாளரா?

**ம**காராஷ்டிரத்தில், மகார் என்ற மிகவும் 'தீண்டத்தகாத' சாதியில் அம்பேத்கார் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஆங்கிலேயரின் இராணுவத்தில் சுபேதார்—மேஜர். மகோ என்ற இடத்திலிருந்த இராணுவப் பள்ளியில் தலைமை ஆசிரியராக அவர் பணியாற்றினார். (1892 வரை 'தீண்டத்தகாதவர்கள்' காலனிய ராணுவத்திற்கு சேர்க்கப்படுவதும், எல்லா இராணுவ வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அடிப்படைக் கல்வி கொடுப்பதும் அமுலில் இருந்தது.) 1891 ஏப்ரல் 14ம் நாள் பீம்ராவ் அம்பேத்கார் அவரது பெற்றோருக்கு 14வது குழந்தையாகப் பிறந்தார்.

அவரது தந்தை இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்ற பின்பு அவர்களது குடும்பம் டாப்பிலியிலும்பிறகு சதாராவிலும் கடைசியாக, பம்பாயிலும் குடியேறியது. சிறிய நகரங்களில் உள்ள பள்ளிகளில் பீமராவ் தீண்டாமைக் கொடுமையினால் துன்பப்பட்டார்; பம்பாயில் அவ்வாறில்லை; அங்கு அவர் தனது பள்ளி இறுதிப் படிப்பை முடித்தார். பொருளாதாரநெருக்கடி காரணமாக அவரைப் படிக்க வைக்க அவரது தந்தை மிகவும் சிரமப்பட்டார்.

எழுத்தாளரும், சீர்திருத்தவாதியுமான கெலாங்கர் என்பவரது உதவியால் பரோடா மன்னரிடமிருந்து கல்லூரிப் படிப்புக்கான உதவித் தொலகையைப் பெற்றார். பி.ஏ.படிப்பை முடித்தபிறகு அமெரிக்காவிலும் மேற்படிப்புக்குச் செல்வதற்காக மன்னரிடமிருந்து மற்றொரு உதவித் தொகை பெற்றார். 1913 ஜூனில் அமெரிக்கா சென்றார். தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து படிப்பிற்காக வெளிநாடு சென்ற முதல் மனிதரவர்; அதன் மூலம் தனது சமூகத்துக்கு பெருமை சேர்த்தவர்.

சாதிய அடக்குமுறைச் சூழ்நிலையிலிருந்து விலகியிருந்ததால் அம்பேத்கார் சுதந்திரமான உணர்வோடு கடுமையாக உழைத்து, கிடைத்த வாய்ப்பைப் பயனுள்ளதாக மாற்றிக் கொண்டார். அமெரிக்க ஜனநாயகத்தாலும், பர்க், ஜே.எஸ் மில் மற்றும் ஜான்டிவே போன்றோரின் சிந்தனையாலும் மிகவும் கவரப்பட்டார். நாடாளுமன்ற ஜனநாயகத்திலும் அரசியல் சட்டதிட்டத்திலும் திடமானநம்பிக்கையை வளர்த்துக் கொண்டார். அமெரிக்காவில் இருக்கும்போது லாலாலஜபதி ராயைச் சந்தித்தார். அம்பேத்காரை கேதார் கட்சியிலோ அல்லது குறைந்தபட்சம் தேசிய அரசியலிலோ பங்கெடுக்க வைக்கராய் முயன்றபோது படிப்புதான் மிகவும் முக்கியம் எனக்கூறி மறுத்துவிட்டார்.

1916ம் ஆண்டு தனது டாக்டர் படிப்புக்கான ஆராய்ச்சியை முடித்தார். கூடுதல் உதவித் தொகையைப் பெற முடியாமல் போனதால் லண்டனில் அவர் படிப்பைத் தொடர முடியவில்லை. எனவே 1917ல் நாடு திரும்பி பரோடா மன்னரிடம் பணியாற்றினார்.

பரோடா மன்னரிடம் பணியாற்றியபோது மிகவும் பாரபட்சமாக நடத்தப்பட்டதால் அந்த வேலையைவிட்டு வெளியேறினார். வேலைக்காகவும், பணம் சம்பாதிக்கவும் பல வழிகளிலும் முயன்றார். சேமிப்பு மற்றும் பங்கு மார்க்கெட் நிறுவனங்களில் சிலகாலம் ஆலோசகராக இருந்தார். பிறகு 1918 நவம்பரில் சைடன்ஹாம் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். 'தாழ்த்தப்பட்ட' சாதியினரின் நிகழ்ச்சிகளில் அவர் ஊக்கமாகப் பங்கேற்ற போதிலும், தனியொருவராகவே 'மூக்நாயக்' எனும் பத்திரிக்கையைத் தொடங்கி நடத்தி வந்தார்.

'தீண்டத்தகாதவர்கள்' மத்தியில் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்ட அம்பேத்கார், உயர்சாதி சீர்திருத்தவாதிகளின் போலித்தனமான ஆதரவு நடவடிக்கைகளை வெறுத்தார். 1924 மார்ச் மாதம் பகிஷ்கிரித் ஹிடாகரிணி சபா என்ற தனது சொந்த அமைப்பை நிறுவினார்.

அம்பேத்கார் அதற்கு ஆணையாளராகவும், சர்சிமன்லால் சீதல்வாத் தலைவராகவும் இருந்தனர். 'தீண்டத்தகாதவர்'களிடையே பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வியைப் பரவச் செய்வதும், அவர்களது குறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதும்தான் சபாவின் குறிக்கோள். 'தீண்டத்தகாதவர்கள்' முன்னேற்றத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com

ல்வி என்பது மிக அவசியம் என்று
ம்பேத்கார் நம்பினார். அதற்கு
ன்னையே உதாரணமாகக்
காண்டு, தனக்குத்தானே
பாது அறிவையும் பலவகையான
குதிகளையும் வளர்த்துக் கொண்
ரர்.

ஆனால் அன்று நாடுமுழுவதும்
ாணவர்களின் உணர்வோ இதற்கு
நர்மாறாக இருந்தது. மாணவர்
ள் தேச விடுதலைப் போரில்
தித்து தமது படிப்பைத் துறந்த
ர். அரசியல் உரிமைக்கான
பாராட்டத்தின் அவசியத்தை
ரசம் தாழ்த்தியே அம்பேத்கார்
ணர்ந்தார். எனினும் கல்விக்கு,
க்கியமாக உயர் கல்விக்கு எப்
பாதுமே முக்கியத்துவம் அளித்து
ந்தார்.

மேற்படிப்பில் இவருடைய
ாதனைகளுக்காக 'தீண்டத்தகாத
ர்'களிடம், முக்கியமாக மகார்
ாதியினரிடையே மிகவும் பிரபல
ானார். 'தீண்டத்தகாதவர்கள்'
ர்பாக பல்வேறு கமிஷன்கள்
ற்றும் மாநாடுகளில் அம்பேத்கார்
றிவு பூர்வமாகவும் மதிப்பு மிக்க
றையிலும் பிரதிநிதித்துவப் படுத்
வதை ஆங்கிலேயர்கள் கண்ட
ர். 1928 அக்டோபரில் நாடு
ழுவதும் சைமன்கமிஷனைப்புறக்
ணித்த போது, அம்பேத்கார்
சமன் கமிஷனுக்கு அழைக்கப்
ட்டார். அழைப்பை ஏற்று
சமன் கமிஷனில் அவர் கலந்து
ாண்ட அதே நேரத்தில், நாடு
ழுவதும் சைமன் கமிஷன்
திர்ப்பு போராட்டத்தை பிரிட்டிஷ்
ரசாங்கம் மிருகத்தனமாக அடக்கி
து. இவரது கல்லூரி நண்பரான
லா லஜபதிராய், இப்போராட்
ல் பங்கேற்று, கடுமையாக போலீ
ரால் தாக்கப்பட்டதன் விளை
ாக மாண்டார்.

1930க்கும் '32க்கும் இடையில்
ந்த மூன்று வட்ட மேசை
நாடுகளிலும் அம்பேத்கார் ஒடுக்
ப்படும் சமூகத்தின் பிரதிநிதியாகக்
ந்து கொண்டார். காங்கிரஸ்
ரோகிகள்கூட அன்று இரண்டு
நாடுகளைப் புறக்கணித்தனர்.
ன்னர் அரசியல் நிர்ணய சட்ட
திருத்தங்களுக்கான வெள்ளை
றிக்கையைப் பரிசீலிக்கும் கூட்டு
லோசனைக் கமிட்டியில் பங்
கற்று 1933 மே மாதம் அவர்
ணடன் சென்றார். 1942ம் ஆண்டு
'வள்ளையனே வெளியேறு' இயக்
த்துக்கு சிறிது காலம் முன்னர்,
ட்டு மொத்தமாக நாடே கொதிப்
டைந்து வெள்ளையர் ஆட்சி
து கோபம் கொப்பளிக்க நின்ற
ாது, வைசிராயின் அமைச்சர
வயில் தொழிலாளர் அமைச்சராக
தவி ஏற்க பிரிட்டிஷார் விடுத்த
ழைப்பை ஏற்று மந்திரியானார்.
வர் தொழிலாளர் மந்திரியாக
ருந்தபோது, பிரிட்டிஷாரின்
த்த முயற்சிகளுக்கு சாதகமாக,



1942ம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு சிறிது காலம் முன்னர், ஒட்டு மொத்தமாக நாடே கொதிப்படைந்து வெள்ளையர் ஆட்சிமீது கோபம் கொப்பளிக்க நின்றபோது, வைசிராய் அமைச்சரவையில் தொழிலாளர் அமைச்சராக பதவி ஏற்க பிரிட்டிஷார் விடுத்த அழைப்பை ஏற்று மந்திரியானார்.

ஆயுதத் தளவாட ஆலைகளில் நிர்வாக—தொழிலாளர் ஆலோசனை சபைகளை நிறுவி பெருமளவு உதவினார். மேலும் இந்த ஆலைகளுக்கு ஆள் சேர்க்க வேலை வாய்ப்பு நிறுவனங்களையும் நிறுவ பாடுபட்டார். இதோடு இவ்வாலைகளில் பணியாற்ற 'தீண்டத்தகாத' மாணவர்களை அயல்நாடுகளுக்குச் சென்று தொழிற்கல்வி பயிற்சி பெறவும் உதவினார்.

முஸ்லிம் லீகின் ஆதரவு பெற்ற பின்னர் 1946ல் அவர் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அரசியல் நிர்ணய சட்டத்தை வகுத்தளிக்கும் கமிட்டியின் தலைவராக பிரிட்டிஷ் அரசால் நியமிக்கப்பட்டார். வெள்ளையர் ஆட்சியில் நடந்த தேர்தல்கள் முற்றிலும் ஜனநாயக விரோதமானவை. 1935ம் ஆண்டின் காலனிய சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. மொத்த மக்கட் தொகையில் 13 சதவீதத்தினருக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 2 சதவீதம் மட்டுமே வாக்குரிமை தரப்பட்டது. 1946ல் இடைக்கால அரசாங்கத்தில் ஜெகஜீவன்ராம் பங்கெடுத்துக் கொண்டதும், இருவரும் சேர்ந்து 'தாழ்த்தப்பட்ட' மக்களின் பிரநிநிதித்துவத்தை உயர்த்தி விட்டதாக அம்பேத்கார் உற்சாகமடைந்தார்.

அதே ஆண்டு அக்டோபர் 15ல் மீண்டும் லண்டன் சென்று அட்லியையும் சர்ச்சிலையும்சந்தித்து, 1) நிர்வாகத்திலும், சட்டசபையிலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் வேண்டும். 2) இடைகாலஅரசாங்கத்தில் குறைந்தபட்சம் மேலும் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் அங்கம் வகிக்க வேண்டும். 3) 1935ம் ஆண்டின் காலனியச் சட்டம் மேலும் 10 ஆண்டுகளுக்கு (1946 லிருந்து) அமுல்படுத்திய பின்னரே அதிகாரத்தை இந்தியர் கைகளுக்கு மாற்ற வேண்டும்—என்ற மூன்று கோரிக்கைகளை முன் வைத்தார். ஆனால் பிரிட்டிஷ் அரசு இதை ஏற்கவில்லை.

நீண்டகாலமாக கடைபிடித்து வந்த காங்கிரசு எதிர்ப்பு, காங்கிரசு வெறுப்பு—துவேசனைப் பிரச்சாரம் என்ற நிலையை விட்டு விட்டு, 1947 அதிகார மாற்றத்துக்குப்பின்னர், காங்கிரசு மந்திரி சபையில் அம்பேத்கார் சட்ட அமைச்சரானார்.

தனது படிப்பை முடிக்க மீண்டும் 1920ல் லண்டனுக்குச் செல்லு முன்பே தீண்டத்தகாதவர்களின் உறுதியான தலைவர் என்பதை அம்பேத்கார் வெளிப்படுத்தினார். 'தீண்டத்தகாத' பல சாதியினரை அவர் அணிதிரட்ட முயன்றாலும், இவருடைய ஆதரவாளர்கள் பெரும்பாலும் இவரது மகார் சாதியினராகவும், ஒரு பிரிவு மாங் சாதியினராகவுமே இருந்தனர்.

மகார்கள், குறிப்பாக இந்த இயக்கங்களுக்கும் மாற்றங்களுக்கும் சாதகமான நிலையில் இருந்தனர். மராட்டியத்தில் பரந்து விரிந்த தீண்டத்தகாதவர்களிடையே மிகப் பெரும் பிரிவினரான இவர்கள், சமார் சாதியினரைப் போல் வேலைத்திறன் மிக்கவர்களல்ல. ஆனாலும் பொதுவாக கிராம ஊழியர்களாகவும், அரசாங்க அலுவலர்களாகவும், எல்லைக் காவலர்களாகவும் பிணங்களை அப்புறப்படுத்துபவர்களாகவும் இருந்தனர். இவ்வேலைகளுக்காக அவர்களுக்கு 'வாட்டன்' எனப்படும் துண்டு நிலம் பயிரிடக் கொடுக்கப்பட்டது.

அவர்களது பரம்பரைத் தொழிலுக்கு மாற்றாக 1892 வரை அவர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அங்கு அவர்களுக்கு கல்வியும் போதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தினால் கிராமங்களில் மகார்களின் நிலைமை மிகவும் சீரழிந்தது. அவர்கள் ஆலைகளில் வேலை தேடி நகரங்களுக்கு குடி பெயர்ந்தனர். ராணுவத்தில் சேர்ந்த மகார்கள் பெற்ற கல்வியினால் கிடைத்த தெளிவும், 'மகாத்மா' பூலேயின் சமூக சீர்திருத்த இயக்கங்களில் பங்குபெற்ற அனுபவமும், அம்பேத்காரின் கருத்துக்கள் முளைவிடுவதற்கு ஏற்றவளமான பூமியாக இருந்தது. சத்தியஷோடக் தலைவர்களான ஜெடே, ஜவால்கர்,



படிப்பகம்

www.padippakam.com

ஆனந்தசாமி ஆகியோரால் நடத்தப்பட்ட பார்ப்பனியத்துக்கு எதிரான (சிலசமயம் நிலப்பிரபுக்களையும் எதிர்த்தது) போர்க்குணமிக்க வெகு ஜன இயங்கங்களும் இதற்கு பேருதவியாக இருந்தது.

பல்வேறு ஒடுக்கப்பட்டசமூகத்தினரின் மாநாடுகளை அடிக்கடி அம்பேத்கார் வழிகாட்டியும் தலைமையேற்றும் நடத்தி வந்தார். திறமையான பேச்சாளரான அம்பேத்கார் தனது உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகளில் வாட்டன் நிலத்தில் உழுது பயிரிட்டு அல்லற்படுவதையும், அழுகியஇறைச்சியை உண்ணுவதையும் விட்டொழித்துவிட்டு அரசியல் உரிமைகளைப் பெறவும், முக்கியமாக கல்வி கற்கவும் தூண்டினார்.

இவரது நடவடிக்கைகள்பெரும்பாலும் சட்டவரம்புக்கு உட்பட்டதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் கட்டமைவை மீறாமலும் இருந்தது. 'தீண்டத்தகாதவர்கள்' அதிகாரத்துக்கான பதவிக்கு வந்தால்தான் நிலைமை மாறும் என்று அவர் கருதினார். அதனால்தான் பிரிட்டிஷாரின் கமிஷன்களில் கலந்து கொண்ட போதெல்லாம் 'தீண்டத் தகாதவர்'களுக்கு சட்டசபையிலும் அரசாங்கத்திலும் அதிக இடங்களை ஒதுக்குமாறு வலியுறுத்தினார். சைமன் கமிஷனிடம்கூட, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனித் தேர்தல் தொகுதிகளைக் கோரினார். பின்னர் காந்தியின் நிர்ப்பந்தத்தால் கூட்டுத் தேர்தல் தொகுதிகளுக்கு ஒத்துக் கொண்டார். 'தீண்டத் தகாதவர்கள்' எல்லா பொது இடங்களையும் பயன்படுத்த அனுமதிக்குமாறு சட்டசபையில் எஸ்.கே. போலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது அதை அம்பேத்கார் தீவிரமாக ஆதரித்தார். வட்டன் நிலங்களை ரயத்துவாரி நிலமாக மாற்றக் கோருவது, தீண்டாமை ஒழிப்பு மசோதா கொண்டு வந்தது, மதக்கட்டுப்பாடு ஆசாரம் என்ற பெயரில் 'தீண்டத் தகாதவர்'களின் மீது ஏவப்படும் அடக்குமுறைகளை எதிர்க்கும் மசோதா முதலான சீர்திருத்தங்களை முன் முயற்சியோடு சட்டசபையில் கோரினார்.

அம்பேத்கார் பொதுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் சொற்பொழிவு நடத்தியது மட்டுமின்றி எப்போதாவது சட்ட வரம்புக்குட்பட்ட வெகுஜன அரசியல் இயக்கங்களையும் நடத்தினார். 1927ல் இவர் உருவாக்கிய 'மகாத் சத்தியாகிரகம்' என்ற மக்கள் திரள் நடவடிக்கையை பாதியிலேயே விலக்கிக் கொண்டு, சட்டவாத பொந்துக்குள் தள்ளி விட்டார்.

மகாத்திலுள்ள சௌதார் குலத்தில் ஒடுக்கப்பட்ட சாதியின



காங்கிரசு எதிர்ப்பு, காங்கிரசு வெறுப்பு—பிரச்சாரம் என்ற நிலையை விட்டுட்டு, 1947 அதிகார மாற்றத்துக்குப் பின்னர், காங்கிரசு மந்திரிசபையில் அம்பேத்கார் சட்ட அமைச்சரானார்.

ரின் உரிமையை நிலைநாட்ட அம்பேத்கார் கடுமையாக முயன்றார். கீழ்சாதியினருக்கு சாதகமாக உள்ள அரசாங்க தீர்மானத்தைக் காட்டி, அம்பேத்கார் தலைமையில் தீண்டத்தகாதவர்கள் அணிதிரண்டு அக்குளத்தில் தண்ணீர் குடிப்பது என தீர்மானித்தனர். 1927 மார்ச்சில் வெற்றிகரமாக மாநாடு நடத்தி முடித்தபின்னர் அனைவரும் அணிதிரண்டு சென்று குளத்து நீரைப் பருகினர். பின்னர் அவர்கள் கலைந்து சென்றபோது உயர்சாதி இந்துக்களால் தாக்கப்பட்டனர். அது சுத்தப்படுத்தப்பட்ட குளம்; மேலும் தனியாருக்குச் சொந்தமானது என்று கூறி நீதிமன்றத்தில் மேல் சாதியினர் வழக்கு தொடுத்தனர்.

அம்பேத்கார் மீண்டும் ஒரு மாநாடு கூட்டி இதே நடவடிக்கையைத் தொடர தீர்மானித்தார். மிகவும் பரபரப்பான சூழலில், 1927 டிசம்பரில் மாநாட்டை நடத்தி, மனுசாஸ்திரத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். பின்னர் பிரிட்டிஷ் நீதிபதி பதியின் வேண்டுகோளுக்கு இணங்கி நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும் வரை குளத்துக்குப் போகும் நடவடிக்கையை நிறுத்தி வைத்துவிட்டு பின்வருமாறு கூறினார். "நமது போராட்டம் சாதி இந்துக்களுக்குஎதிரானது. இதனால் வெளியில் நமக்கு ஓரளவுதான் ஆதரவு உள்ளது. இதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் அரசாங்கத்தை விரோதித்துக் கொண்டு நமது போராட்டத்தின் மூலம் எதிர்த்தரப்புக்கு போய்விடக் கூடாது. இதனால் நமக்கு ஒரு பலனும் விளையப் போவதில்லை." எனவே நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருப்பதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பு பத்தாண்டுகள் கழித்துத்தான்வெளியானது!

பெரியார் ஈ.வெ.ரா.வின் திருவிதாங்கூர் கோயில் நுழைவுப் போராட்டத்தால் உற்சாகமடைந்த அம்பேத்காரும் 1927ல் அமராவதியிலும், 1930 மார்ச்சில் நாசிக்கிலும் கோயில் நுழைவுப் போராட்டங்களில் பங்கேற்றார். அமராவதி கோயில் நிர்வாகம் தீண்டத்தகாதவர்களுக்கு கோயிலைத் திறந்துவிட மறுத்தது. இதையொட்டி நகரில் பதட்ட நிலை நிலவியது.

அம்பேத்கார் தலைமையில் மாநாடு நடந்து முடிந்ததும், கோயிலை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. ஆனால் அன்றைய மாகாண சட்டசபை உறுப்பினரும் அம்பாதேவி கோயில் நிர்வாகக் கமிட்டித் தலைவருமான காபர்டே என்பவரின் வற்புறுத்தலால், திட்டம் திடீரென தள்ளிவைக்கப்பட்டு இருதரப்பினரும் சமரசத்திற்கு வர அவகாசம் அளிப்பதென முடிவானது. அதேசமயம் நாசிக்கில் உள்ள கலாராம் கோயில் நுழைவுப் போராட்டம், 1930 மார்ச்சில்காந்தி தண்டி யாத்திரை புறப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு தொடங்கி நீண்டகாலப் போராட்டமாகத் தொடர்ந்தது. அந்தக் கோயில் இதனால் ஒரு வருடத்திற்கு மூடிக்கிடந்தது.

கடைசியாக 1935ல் அம்பேத்கார் கோயில் நுழைவுப் போராட்டத்தை கைவிட்டுவிட்டு தங்கள் அரசியல் உரிமையைப்பெறுவதற்கு கவனம் செலுத்தும்படி அறைகூவி அழைத்தார். இந்து மதத்திற்குள்ளேயே சமமான அந்தஸ்தைப் பெறும் போராட்டம் கடைசியில் தோல்வியில் முடிந்தது. பின்னர் மதம் மாறுவது என்ற சிறுபிள்ளைத்தனமான முடிவுக்கு அம்பேத்கார் வந்தடைந்தார்.

'தீண்டாத்தகாதவர்'களின் உரிமைகளைப் பெறுவதற்கு அம்பேத்கார் முக்கிய கவனம் செலுத்தி வந்த போதிலும், தேசியவாதிகளுக்காக சிலசமயம் போராடினார் என்பதைத் தவிர, இவர் தேசியப் போராட்டத்தில் கலந்து கொள்ளவேயில்லை. உண்மையில் முழுச் சுதந்திரத்தைவிட பிரிட்டிஷாரின் சுயாட்சி அந்தஸ்துக்கே அவர் ஆதரவளித்தார். இந்தியாவில்பிரிட்டிஷாரின் கொள்ளை பற்றிய பரந்த அறிவை அவரது ஆராய்ச்சிகளும் பேச்சுக்களும் பிரதிபலித்த போதிலும், வெள்ளையரை எதிர்த்த போராட்டத்தில் எப்போதாவதுதான் கலந்து கொண்டார். இவர் காங்கிரசைஎதிர்த்தார். 'அரிசனசேவை' என்ற நேர்மையற்ற தந்திரமான செய்கைக்காக காந்தியைத் தாக்கினார். சாதி இந்துக்களின் ஆதிக்கத்தையும் பிரிட்டிஷாரையும் ஒரே நேரத்தில் எதிர்க்க முடியாது என அம்பேத்கார் எண்ணினார். அத



படிப்பகம்

www.padippakam.com

னால் சாதியக்கொடுமைக்கு எதிராக முக்கியத்துவம் கொடுத்து, பிரிட்டிஷாரோடு ஒத்துழைப்பாக நடந்து கொண்டார். இந்தப் போக்கு அவருடைய முழு வாழ்க்கையிலும், நடவடிக்கையிலும் தெளிவாக பிரதிபலித்தது.

காங்கிரசுக்கட்சி, சாதி இந்துக்களின் ஆதிக்கம் உடையதாகவும் அதன் தலைமை பிரிட்டிஷாரை எதிர்ப்பதே அரிதாகவும் இருந்தது. காங்கிரசை வெறுத்து ஒதுக்கிய அம்பேத்கார், காங்கிரசுக்கு வெளியே உள்ள பல்வேறு ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன்கூட ஒன்றிணைந்து போராட முன்வரவில்லை.

1937ல் அம்பேத்கார் சுதந்திர தொழிலாளர் கட்சியை நிறுவினார். அப்போது நடந்த பம்பாய் மாகாண சட்டசபைத் தேர்தலில் இக்கட்சி போட்டியிட்டு 17 இடங்களில் 15ல் வெற்றி பெற்றது. தொழிலாளி வர்க்கத்திடையே வளர்ந்து வரும் கம்யூனிச மாயத் தோற்றத்திற்கு நாங்கள்தான் உண்மையான மாற்று என்று அக்கட்சி பிரகடனப்படுத்தியது. 1942ல் இக்கட்சி கலைக்கப்பட்டு தாழ்த்தப்பட்டோர் சங்கம் என்ற அகில இந்திய கட்சி அமைக்கப்பட்டது.

கம்யூனிசத்தைப் பற்றி அம்பேத்காருடைய கருத்துகளும் கட்டுரைகளும் குழப்பமானது. அக்காலத்தில் அவர் ஒரு வக்கிரமான கம்யூனிச எதிர்ப்பாளர். இந்தியக் கம்யூனிஸ்டுகளைக் கடுமையாக சாடி வந்த அவர் கம்யூனிச சிந்தனைகளுக்கு நன்சான்றிதழ் கொடுத்தார். ஆனால் நடைமுறையில் ஒரு சில சந்தர்ப்பங்கள் தவிர அவர் உறுதியான கம்யூனிச எதிர்ப்பாளராகவே இருந்தார்.

அம்பேத்காருடைய கம்யூனிச எதிர்ப்பு 1920களிலேயே ஆரம்பித்து விட்டது. அந்தக் காலக் கட்டத்தில் பம்பாயில் உழைக்கும் வர்க்க நலச் சங்கங்கள் பார்ப்பனரல்லாதவர் கட்சித் தலைவர்களான எஸ். கே. போலே போன்ற சமூக சீர்திருத்தவாதிகளால் அமைக்கப்பட்டது. பின்னர் இச்சங்கங்கள் கிரினி காம்கார் மகா மண்டல் என்ற தொழிற்சங்கமாக மாறி, பின்னர் கிரினி காம்கார் யூனியன் (லால் பவ்தா) என்ற பெயரில் கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழ் செயல்பட்டது. 1924ல் பார்ப்பனரல்லாதோர் கட்சித் தலைவர்களான பாஸ்கர்ராவ் ஜாதவ், கோவிந்தராவ் சிண்டே போன்றோர் காங்கிரசு மற்றும் கம்யூனிஸ்டுகளின் முயற்சிகளை முறியடிக்க ஆலைகளில் சாதிவாரியான தொழிலாளர் சங்கங்களை நிறுவலாம் என்று பிரிட்டிஷாருக்கு ஆலோசனை கூறினர். எச். பி. மோடி மற்றும் பிற ஆலை முதலாளிகளின் சங்கத்திடமிருந்து அவர்கள் பிரச்சாரத்திற்கு



1928 அக்டோபரில் நாடு முழுவதும் சைமன் கமிஷனைப் புறக்கணித்த போது, அம்பேத்கார் கமிஷனுக்கு அழைக்கப்பட்டார். அழைப்பை ஏற்று சைமன் கமிஷனில் அவர் கலந்து கொண்டார்.

நிதியுதவி பெற்றதாக கூறப்பட்டது. அதே சமயம் அவர்களது 'கைவாரி' எனும் செய்தித் தாளுக்கு 'கிராஃபோர்டு' பங்கு மார்க்கெட் முதலாளிகளிடமிருந்து நிதியுதவி பெற்றனர்.

1928ல் பம்பாயில் ஆறுமாத காலம் நடந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் வீரம் செறிந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை அம்பேத்கார் தீவிரமாக எதிர்த்தார். ஈ. டி. சாசூன் ஆலையின் மேலாளர் ஸ்டோன்ஸ் என்பவரால் ஊக்குவிக்கப்பட்ட அம்பேத்காரும், எஸ். கே. போலேவும் தீண்டத்தகாதவர்களிடம் சென்று வேலைக்குத் திரும்புமாறு கோரினர். 'அதிக சம்பளம் கிடைக்கக் கூடிய நெசவுத் துறையில் வேலை செய்ய தீண்டத்தகாதவர்களையும் அனுமதிக்க கம்யூனிஸ்டுகள் கோரிக்கை வைக்கவில்லை; மேலும் வேலை நிறுத்தப் போராட்டத்தை பொருளாதார நலன்களுக்காக அல்லாமல், அரசியல் புரட்சிக்காக கம்யூனிஸ்டுகள் பயன்படுத்துகிறார்கள்' என்று கேடாகப் பிரச்சாரம் செய்து தீண்டத் தகாதவர்களை போராட்டத்திலிருந்து திசை திருப்பினர்.

1929 மீரட் சதி வழக்கில் கிரினி காம்கார் சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது மீண்டும் ஒரு வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போதும், தீண்டத்தகாதவர்களால் பொருளாதாரச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாது என்று கூறி போராட்டத்தை எதிர்த்தும், ஒடுக்கப்படும் சாதியினரை திசைதிருப்பவும் செய்தார்.

1938 மார்ச்சில் பம்பாய் சட்டசபையில் காங்கிரஸ் அரசாங்கத்தால் தொழில் உறவு மசோதா கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நடத்திய ஒருநாள் வேலை நிறுத்தத்தை மட்டுமே அம்பேத்கார் ஆதரித்துள்ளார்.

1950களில் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை அம்பேத்கார் எதிர்த்தபோது அவருடைய கம்யூனிச எதிர்ப்பு தீவிரமாக வெளிப்பட்டது. அமெரிக்காவின் ராணுவக் கூட்டமைப்பான 'சீட்டோ'வில் சேராததற்காக நேருவை அவர் கண்டித்தார். அவரைப் பொருத்தவரை 'சீட்டோ' சுதந்திர நாடுகளின் அமைப்பு என்றும் அதன் மூலம் ரஷியாவின் எதிர்கால ஆக்கிரமிப்பைத் தடுக்கலாம் என்றும் கருதினார். "பத்து ஐரோப்பிய நாடுகளையும் ஆசியாவில் பாதியையும் விழுங்கிவிட்ட ரஷ்ய கம்யூனிச பூதத்துடன் நேரு இணங்கிப் போகிறார்" என்று குற்றஞ்சாட்டினார். நேருவின் 'சமாதான சகவாழ்வு'க் கொள்கையை எதிர்த்தார். "தன் வழியில் எதிர்ப்படும் ஒவ்வொன்றையும் விழுங்கிவிடும் காட்டுத் தீயைப் போன்றது கம்யூனிசம். எப்படிப் பார்த்தாலும் கம்யூனிசக்கொள்கை மிக மோசமானது" என்று ராஜ்ய சபாவில் சாடினார்.

சீக்கிய மதத்துக்கு மாறிவிடுவது என்ற கருத்தையும் அம்பேதகார் கொண்டிருந்தார். முஸ்லிம்கள் இவரோடு சரளமாகப் பழகி வந்த போதிலும் அவர்களுடைய 'குறுகிய மனப்பான்மை மற்றும் குறுங்குழுவாத தன்மை'யால் முஸ்லிம்களை வெறுத்தார். அவர்களுக்கு தனித் தேர்தல் தொகுதிகள் ஒதுக்குவதையும் எதிர்த்தார். ஆனால் 1940ல் பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கை எழுந்த போது, அன்று இப்பிரச்சினையில் பெரும் குழப்பம் நிலவியபோது, சட்ட நுணுக்கங்களையும் தர்க்க விவாதங்களையும் கொண்டு 'பாகிஸ்தான் பற்றிய சிந்தனைகள்' என்ற நூலை எழுதினார். அதில் பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவளித்தார். முஸ்லிம் தேசியம் இருப்பதை இயல்பாகவே ஏற்கவேண்டும் என்றும், முஸ்லிம்கள் இந்தியாவுக்கு விசுவாசமாக இருக்க மாட்டார்கள்; எனவே இந்தியாவோடு சேர்ந்து இருப்பதைவிட, பாகிஸ்தான் பிரிந்து செல்வதே நல்லது என்றும் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1945ல் அம்பேத்கார் எழுதிய இந்தியாவுக்கான அரசியல் நிர்ணய சட்டத்தில் பழங்குடியினருக்கு எவ்வித அரிசியல் உரிமையும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக போதுமான அளவு வளரவில்லை. அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் உரிமை கொடுப்பது அவர்களது சொந்த நலனுக்கே எதிரானது என்று வாதிட்டார். எல்லா ஒடுக்கப்படும்



படிப்பகம்

www.padippakam.com

மக்களின் நலனுக்கானதாக அல்லாமல் இப்படி ஒரு பிரிவினரை தனிமைப்படுத்துவது தவறு என்று அவரைவிமரிசித்தபோது, "துன்பப்படும் மக்கள் அனைவரின் தலைவராக இருக்க நான் முயற்சிக்கவில்லை. தீண்டத் தகாதவர்களின் நலனுக்காக இருப்பது என்பதே என்னுடைய சக்திக்குப் போதுமானதாக உள்ளது" என்றார்.

1951ம் ஆண்டு 'இந்து சட்டத் தொகுப்பு' மசோதா கொண்டுவரப்பட்டபோது நேரு அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்தார். காங்கிரசை கடுமையாகஎதிர்த்தார். பின்னர் 1951 பொதுத் தேர்தலின் போது சோசலிஸ்டுக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து கொண்டார். 1952ல் உ. பி. ஜமீன்தார்களுக்கு ஆதரவாக, உ. பி. ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச் சீர்திருத்த சட்டத்தை எதிர்த்து அவர்களுக்காக வாதாடினார். 1956 அக்டோபரில் அம்பேத்கார் புத்தமதத்துக்கு மாறினார். இந்தியக் குடியரசுக் கட்சியை உருவாக்கிய பின்னர் 1956 டிசம்பர் 5ம் நாள் இறந்தார்.

மகார் சாதி மற்றும் சில சாதிகளுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு தன்னம்பிக்கை கொடுத்ததைத் தவிர அம்பேத்காருடைய வாழ்க்கையில் வேறொன்றுமில்லை. 'தீண்டத் தகாதவர்'களும் கூட உயர்ந்த அதிகாரங்களை அடையலாம், குறைந்தபட்சம் சமுதாயத்தில் அவர்களுடைய அந்தஸ்தை, அரசாங்கத்தில் ஓர் அதிகாரியாவதன் மூலமோ அல்லது உயர்கல்வி பெறுவதன் மூலமோ அல்லது இரண்டின் மூலமோ உயர்த்திக் கொள்ளலாம் எனக் காட்டினார். இது முந்தைய நூற்றாண்டில் 'தீண்டத்தகாதவர்' எண்ணியும் பார்க்க முடியாததாக இருந்தது.

அம்பேத்கார் வாழ்க்கையில் காணப்படும் இந்த உண்மைகள், ஒன்று அவரை முழுவதுமாக கண்டனம் செய்வதன் மூலமோ அல்லது அவரை மிகப் பெரிய புரட்சியாளராக சித்தரிப்பதன் மூலமோ சில 'இடதுசாரி'களால் மறைக்கப்படுகிறது. ஒரு நிலையான இடத்தில் அவரை நிறுத்த வேண்டும் என்ற ஆர்வத்தினால் அவரின் படைப்புகளில் தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை எடுத்துக்காட்டி தங்கள் கருத்துக்களை நிரூபிக்க முயலுவதன் மூலம் அவர்கள் யதார்த்தத்தை சிதைக்கிறார்கள். அம்பேத்கார் கிட்டத்தட்ட ஒரு புரட்சிவாதிதான் என்று நிரூபிக்க முயலும் போக்கு மிகவும் காலாவதியான ஒன்றாகும். அவருடைய வாழ்வும் நடவடிக்கைகளும் இதை நிரூபிப்பதாக இல்லை.

நன்றி: ஃபிராண்டியர்
டிசம்பர் 8, 1979

# போலிக் கம்யூனிஸ்டுகளின் 'புதிய' சாராயக் கொள்கை

கம்யூனிஸ்டுகள் என்றால் ஒழுக்கமானவர்கள், நேர்மையானவர்கள், கட்டுப்பாடானவர்கள் என்பதுதான் உண்மை. ரசியாவில்கூட மக்கள் சொந்த வாழ்க்கையில் ஒழுக்கமானவர்களாக இருக்க உதவும் வகையில் மதுபானக் கடைகளை மிகமிகக் குறைத்துவிட்டனர். ஆனால் கேரளத்தில் ஆட்சிக் கட்டிலேறியவர்களோ கம்யூனிஸ்டுகள் என்ற இலக்கணத்திற்கு நேரெதிராக இருக்கின்றனர்.

அங்கு மதுவிலக்கு நடைமுறையில் இல்லையென்றாலும் கல்வி நிறுவனங்கள், வழிபடும் இடங்கள் இவற்றைச் சுற்றி 400மீட்டர் சுற்றளவில் மதுபானக் கடைகள் இருக்கக் கூடாது என்ற சட்டம் ஆகஸ்டு 27வரை நடைமுறையிலிருந்தது.

தேர்தலில் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசி, பணத்தை வாரியிறைத்து ஆட்சியைப் பிடித்த 'இடது சாரி' ஜனநாயக அரசு இந்த சட்டத்தை ரத்து செய்துவிட்டது. கௌரி என்கிற சுங்கவரித் தீர்வை மந்திரி இச்சட்டத்தை ரத்து செய்து கல்வி நிறுவனங்கள், வழிபடும் இடங்களின் அருகே மதுபானக் கடைகளைத் திறக்க அனுமதி அளிக்கும் அதிகாரத்தை வருமானவரிகமிஷனருக்கு அளித்துள்ளார்.

பல்வேறு மக்கள் திரள் அமைப்புகள், நிறுவனங்கள், எதிர்க் கட்சிகள், முக்கிய பிரமுகர்கள் என போலிகள் எதிர்பார்க்காத பலரும் இந்த 'புதிய சாராயக்' கொள்கையை கடுமையாகஎதிர்த்தனர்.

'இடது கம்யூனிஸ்டு' கேரள மாநில செயலர் வி.எஸ். அச்சுதானந்தன், மாநில கன்வீனர் எம்.எம். லாரன்ஸ், மந்திரி கௌரி என இந்தப் புதிய சாராயக் கொள்கைக்கு வக்காலத்து வாங்கியவர்கள் பல்வேறு சாக்குப் போக்குகளை சொல்லிப் பார்த்தனர்.


"புதிய கடைகளுக்கு அனுமதி வழங்க அல்ல; மாறாக ஏற்கனவே லைசென்சு வாங்காமல் கல்வி நிறுவனங்கள், வழிபடுமிடங்களுக்கு அருகே இயங்கி வரும் சுமார் 200 கடைகளை சட்டபூர்வமாக ஒழுங்கு படுத்தவே இச் சட்டம்"

"அந்தக் கடைகளை நம்பி வேலை செய்யும் தொழிலாளிக[ள்] (அவர்கள் 'மார்க்சிஸ்டு' தொழ[ிற்] சங்கஉறுப்பினர்களாம்!) வாழ்க்[கை] பாதிக்கப்படக் கூடாது என்பதற்[காகத்] தான்..."

"எங்களின் மதுக் கொள்[கை] பற்றி பத்திரிக்கைகள் திரி[த்து] புரட்டி பொய்யான செய்திக[ளை] வெளியிட்டு திசை திருப்புகி[ன்]றன."

—இப்படி எத்தனையோ சா[க்கு] ஜாப்புகள். எவையுமே மக்களிட[ம்] எடுபடவில்லை.

அதே நேரத்தில் 200 சாராய[க்] கடைகளில் வேலை செய்ய[ும்] தொழிலாளிக்கு பாதுகாப்பளிக்[க] சட்டவிரோதமான கடைகளை சட்டபூர்வமாக்கும் போலி க[ம்]யூனிஸ்டுகள்தான், மாநிலத்திலுள்[ள] 20,000 கள்ளச் சாராயக் கடை[]களை ஒழிக்க மக்கள் ஆதர[வு] வேண்டும் என்று வாய்ச்சவடா[ல்] அடிக்கின்றனர். சட்டசபை மூல[ம்] மக்களுக்கு நல்லது செய்வோ[ம்] என ஓட்டு வாங்கியவர்க[ள்] அதைச் செய்ய முடியாதபோ[து] மக்கள்மீது பழி போடப்பார்க்கிறா[ர்]னர். பிரச்சினை பெரிதாகி நா[று]மடிக்க ஆரம்பித்தவுடன் பொது[ச்] செயலாளர் நம்பூதிரிபாடு தலை[]யிடத் தொடங்கினார். பின்ன[ர்] அச்சுதானந்தன் கட்சி ஊழியர்க[ள்] கூட்டத்தில் சட்டத்தை வாப[ஸ்] வாங்குவதாக அறிவித்தார். அதற்[கு] ஒரு நாள் கழித்தே மந்திரிய[ின்] அதிகாரபூர்வ செய்தி வெளி[] []து. ஆனாலும் சட்டவிரோதம[ாக] இயங்கி வந்த 200க்கும் மேற்பட்[ட] கடைகள் மூடப்படவில்லை[;] மாறாக 'புதிய சாராயக்' கொ[ள்]கையின்கீழ் அது சட்டபூர்வமா[கி] விட்டது. இந்த இடைக் காலத்தி[ல்] மேலும் பல புதிய சாராயக் கடை[]





படிப்பகம்

www.padippakam.com




கள் சட்டப்படி அனுமதி பெற்று இயங்கி வருகின்றன. 'புதிய சாராயக்' கொள்கையை வாபஸ் வாங்கிய போலிகள் இவைபற்றி மௌனம் சாதிக்கின்றனர்.

ஆனால், தேர்தலின்போது கோடிக் கணக்கில் போலி கம்யூனிஸ்டுகளுக்கு கொட்டியளந்த சாராய சாம்ராஜ்யவாதிகள் வட்டியும் முதலுமாக சம்பாதிக்க வழி தேடிக் கொண்டனர்.

இதற்கு உடந்தையாயிருந்த போலிக் கம்யூனிஸ்டுகளோ இப்படிப்பட்ட பிரச்சினைகள் அம்பலப்படும்போது அதை மூடி மறைக்க மக்கள் கவனத்தை திசை திருப்புகின்றனர்.

இப்போது திடீரென லஞ்ச ஊழலுக்கு எதிராக மூலை முடுக்குகள், பட்டிதொட்டியெல்லாம் போலி கம்யூனிஸ்டின் இளைஞர் அமைப்பு சுவரெழுத்து, பேனர், போஸ்டர், ஊர்வலம் ஆர்ப்பாட்டம் என முடுக்கிவிடப்பட்டுள்ளது.

ஆனால் லஞ்ச ஊழல் மலிந்த மின்வாரியம், பொதுப்பணித் துறை, உள்ளாட்சித் துறை (ரெவின்யூ டிபார்ட்மெண்ட்), மோட்டார் பதிவு அலுவலகம் போன்றவைகளின் ஊழியர்களில் 70 சதவிதத்துக்கு மேற்பட்டவர்கள் 'மார்க்சிஸ்டு' கட்சியின் என்ஜிஓ சங்கத்தவர்கள்தான்.

இந்த சங்கத்தவர்களை லஞ்ச ஊழலுக்கு எதிராக இருக்க உறுதி மொழி எடுத்தாலே, லஞ்ச ஊழலை ஒழிக்க முதல் நடவடிக்கை எடுப்பதாயிருக்கும். அதைவிட்டு இளைஞர் அமைப்பை வீதியில் இறக்கி திசை திருப்புகிறது. இந்த அப்பட்டமான ! ஏமாற்று வித்தையை மக்கள் தெரிந்து கொண்டு வருகின்றனர்.

இளைஞர் அமைப்பு லஞ்ச ஊழலுக்கெதிராக உறுதி மொழி எடுத்தபோதே, பிரம்பாவூர் தாலுகா இளைஞர் அமைப்பு தலைவர் அஷரப் செய்த லஞ்ச ஊழல்கள் அம்பலப்பட ஆரம்பித்து விட்டது.

பாரத ஸ்டேட் பேங்கின் டூப்ளிகேட் சீல் தயாரித்து பல வருடங்களாக அஷரப் பணம் கையாடல் செய்திருக்கிறார். அதே போல ஆர்டிஓ ஆபீசிலும் தில்லுமுல்லுகள் செய்திருக்கிறார். ஆனால் இன்று வரை போலீசு நடவடிக்கையில்லை. கட்சியோ அஷரப்பை பாதுகாக்கிறது.

கழிசடைகளைக் கட்சி அணிகளாகக் கொண்டுள்ள கட்சித் தலைமையோ மோசடியில் முன்னணி வகிக்கிறது. 1981 ஈ.கே. நாயனார் ஆட்சியிலேயே 'தேசாபிமானி' (போலிக் கம்யூனிஸ்டுகளின் தினசரி ஏடு) பத்திரிக்கையை திருவனந்தபுரத்தில் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அன்று அது சாத்தியமாகவில்லை.

இன்று ஆட்சியேறியவுடனேயே 40 லட்ச ரூபாய் செலவில் பத்திரிக்கைக்கு இடம், கட்டிடம், நவீன ஆஃப்செட் இயந்திரம் வாங்கிவிட்டனர்.

இந்த 40 லட்ச ரூபாய்க்கு ஏகேஜி சென்டர் (போலிகளின் தலைமை அலுவலகக் கட்டிடம்) பாண்டு கடன்பத்திரம் வெளியிட்டு நிர்ப்பந்தப்படுத்தி மக்களிடம் பணம் வசூலிக்கின்றனர்.

முன்னணி அரசிலுள்ள வலது கம்யூனிஸ்டு தலைவர் ஒருவரே "இதே போல கடன் பத்திரம் விநியோகிக்க ஏகேஜீ சென்டர் என்ன ரிசர்வ் வங்கிக் கிளை அலுவலகமா?" என்று கேட்கிறார்.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்கவும் உல்லாச போகத்திற்காக லஞ்ச ஊழலில் ஊறித் திளைக்கவும் ஓட்டுப் பொறுக்க தீர்மானித்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகள், இனியும் மக்களுக்காகத்தான் இருக்கிறோம் என்று சொல்லி ஏமாற்ற முடியாமல் இப்போது தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● மணி

## படர்ந்து வருகிறது பாசிச அபாயம்!

பயங்கரவாதிகளை அதிகமாகக் கொண்ட மாநிலம் பஞ்சாப் என நீங்கள் நினைத்தீர்களானால் அது தவறு! பஞ்சாபைவிட அதிக எண்ணிக்கையில் குஜராத்தில் 'பயங்கர வாதிகள்' சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதங்களில் கைது செய்யப்பட்டவர்கள் 2230 பேர்.

இவர்கள் அனைவரும் தீவிரவாதிகளா? இல்லை! அன்னிய சீர்குலைவு சக்திகளோடு நாட்டைத் துண்டாட சதி செய்தவர்களா? நிச்சயமாக இல்லை! இவர்கள் சாதாரண விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் அப்பாவி மக்கள். கைது செய்யப்பட்டவர்களில் 50 பேர் ஏதுமறியா சிறுவர்கள்!

பழிவாங்கும் நோக்கத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதானவர்கள் விவசாய சங்க, தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டுமல்ல; சாலை மறியல் போராட்டம் நடத்திய விவசாய சங்கத்தினர், விலை உயர்வை எதிர்த்துப் போராடிய மாணவர்கள், மக்கள் நன்மதிப்பைப் பெற்ற நகராட்சி கமிஷனர் ஜெகதீசனை ஊர் மாற்றம் செய்ததை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த பகுதிவாழ் மக்கள்;

இன்னும், ஜுனாகத் மாவட்டத்தில் கலப்பு திருமணத்தின் போது கைகலப்பில் ஈடுபட்டவர்கள், அகமதாபாத் மாவட்டம் சனாந்த் கிராமத்தில் குடும்பத் தகராறு காரணமாக அடிதடியில் இறங்கியவர்கள், இதுதவிர குருடர்கள், பைத்தியக்காரர்கள், பிச்சைக்காரர்கள், 80வயது கிழவர்கள் என வரைமுறையின்றி பாமர மக்களும், போராட்ட முன்னணியாளர்களும் பயங்கரவாதிகளாக குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கவே இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது, பாரதீய ஜனதா கட்சித் தொண்டர்களே பெருமளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இச்சட்டம் தவறாகப் பிரயோகிக்கப்படமாட்டாது என்று எதிர்க்கட்சிகளின் ஒப்புதலோடுதான் பாசிச ராஜீவ் கும்பலால்நிறைவேற்றப்பட்டது.

குஜராத்தில் பயங்கரவாதிகளைப் பிடித்து சிறையிலடைக்கும் போலீசாரின் வேட்டை தீவிரமாகி, கேவலமாக மக்களிடம் அம்பலப்பட ஆரம்பித்தவுடன் டெல்லி குருபீடமே அரண்டு போய் சட்டத்தை சிறிது தளர்த்தச் சொல்லியது. பிறகு, சமீபத்தில் 1800 பேர்மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் இன்னமும் சிறையில் வாடுகின்றனர்.

மத்தியிலே பாசிச கும்பல் எட்டடி பாய்ந்தால் மாநிலத்தில் அதன் அடிவருடிகள் பதினாறு அடி பாய்கிறார்கள். தமிழகத்திற்கு ஒரு குண்டர் சட்டம். குஜராத்திற்கு ஒரு பயங்கரவாத தடைச்சட்டம். பாசிச அபாயம்படர்ந்து வருகிறது. நாமும் நமதுபோராட்ட ஆயுதத்தைக் கூர்மைப்படுத்துவோம்! ●



படிப்பகம்

www.padippakam.com



# அடிப்படைவசதி செய்துதராத அரசு இன்னும் எதற்கு?

மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே தாங்கள் பிறப்பெடுத்திருப்பதாக பீற்றித் திரிகின்றனர் ஓட்டுப் பொறுக்கிகள். இராணுவம், போலீசு முதல் அரசுத் துறையின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், 'மக்களுக்குச் சேவை செய்வதே எங்கள் கடமை!' 'மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவே இருக்கிறோம்' என்ற விளம்பரங்களுக்குப் பஞ்சமில்லை.

ஆனால் குடிநீர் வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி, சாலை வசதி, மின்சாரவசதி—இப்படி எந்த ஒரு அடிப்படைத் தேவையும் பூர்த்தி செய்யப்படாமல் வெளி உலகுடன் எந்தத் தொடர்புமின்றி இருட்டில் இருக்கும் கிராமங்கள் ஆயிரமாயிரம்! அல்லல்படும் மக்கள் கோடிக்கணக்கோர்!

அரசின் அநியாயச் செலவுகளோ அதிகரித்துக் கொண்டே போகிறது. மக்கள் வரிப்பணத்தில் கோடிக்கணக்கில் கொள்ளையடித்துஅதிகார வர்க்கம்அளவின்றி ஊதிப் பெருக்கிறது.

மக்களோ தங்கள் தேவைகளைப் பட்டியலிடுகின்றனர். மனுக்கள் மேல் மனுக்கள் அனுப்பி சலித்துப் போகின்றனர். ஓட்டுப் பொறுக்கிகளின் வழியில் உண்ணாவிரதமிருந்து ஊர்வலம் போய் உபத்திரவம் அடைகின்றரே தவிர உதவிகள் பெற்றிடவில்லை.

இந்த அரசும், அதிகாரவர்க்கமும் ஓட்டுப் பொறுக்கிகளும் யாருக்கு சேவை செய்கின்றனர் என்பதை சாலை வசதி கேட்ட மக்கள் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு பலியான சமீபத்திய வேப்பந்தட்டை வரை அம்பலப்படுத்துகிறது.

தங்கள் தேவைகளைக் கவனிக்காது புறக்கணிப்பதால் எட்டு வருடம் வரிக்கட்டாமல், மூன்று பொதுத் தேர்தல்களில் ஓட்டு மொத்தமாக ஓட்டுப் போடாமல் ஏமம் கிராமத்து மக்களைப் போன்ற முன்னோடி கிராமங்களும் நமக்குப் பாதை காட்டியுள்ளது.

சென்னையிலிருந்து எண்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கானத்தூர் கிராம மக்கள் நடைமுறையில் ஒரு விசயத்தை அம்பலப் படுத்துகின்றனர்.

மதுராந்தகம் தாலுகா லத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கடலோரமாக அமைந்துள்ளது கானத்தூர் கிராமம். ஊர், காலனி மற்றும் மீனவர் குப்பம் என மூன்று பிரிவாக அமைந்துள்ளது. கிராமத்தில் சுமார் 500 வீடுகள் உள்ளன. ஏறக்குறைய 2000 மக்கள் வசிக்கின்றனர்.

இவர்களின் எந்த ஒரு சிறு தேவைக்கும் நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கூவத்தூர் என்ற கிராமத்திற்குதான் செல்ல வேண்டும். சாலை வசதி ஏதுமில்லை. வயல் வரப்புகளின் மீதுதான் நடந்து செல்ல வேண்டும். தவிர இரண்டு ஊர்களுக்குமிடையில் பக்கிங்காம் கால்வாய் ஓடுகிறது. அதைக் கடக்க ஒரு ஆள் நடந்து செல்லும் அளவுள்ள சிறு பாதை கட்டப்பட்டுள்ளது— முறையான பாலம் இல்லை.

இந்த மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் எண்ணிப் பார்க்க முடியாத அளவு கொடியவை. சைக்கிளோ, வண்டியோ வர வழியில்லை. ஆத்திர அவசரத்திற்கு பக்கத்து ஊருக்கு உடனே சென்று வர முடியாது.

ஐந்தாவது வகுப்பிற்கு மேல் படிக்க நினைக்கும் சிறுவர்கள் நான்கு கிலோமீட்டர் ஒத்தையடிப் பாதையில் நடந்து சென்று வர வேண்டும். தபால்கள் கானத்தூருக்கு வராது. கானத்தூர் மக்களே கூவத்தூருக்கு வந்து தபால் வந்திருக்கிறதா எனப் பார்த்து வாங்க வேண்டும்.

சாலை வசதி இல்லாததால், உரிய நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாமல் வழியிலேயே செத்து மடிந்தவர்கள் எத்தனையோ பேர். சமீபத்தில் இறந்தவர்கள் பட்டியல் இதோ:

சின்னபாலு என்ற மரம் ஏறும் தொழிலாளி விழுந்து அடிபட்டு உடனே மருத்துவமனை கொண்டு போக முடியாமல் வேதனையால் துடித்து இறந்தார். கண்ணையனின் மனைவி குணபூஷனம், சண்முகத்தின் மனைவி மல்லிகா, சடையாண்டியின் மனைவி பிச்சம்மாள் மற்றும் விநாயகத்தின் மனைவி முத்துலட்சுமி முதலியோர் பிரசவ நேரத்தில் மருத்துவ மனை கொண்டு போக முடியாமல் இறந்தவர்கள்.



ஒரே நாளில் திட்டமிட்டு உருவாக்கிய சாலை. கலைக்க அனுமதிக்க மாட்டோம் என அணிவகுத்து மனிதச் சங்கிலியாய் நிற்கும் கானத்தூர் மக்கள்.

காமராஜ் முதல்வராயிருந்த காலத்திலிருந்து மனுக்களாக எழுதிக் குவித்தனர். தேர்தல்களின் போது வாக்குறுதிகளைக் கேட்டு சலித்துப் போயினர்.

மனுக்கொடுத்து சலித்துப் போன மக்கள் ஒன்றாகத் திரண்டனர். எந்த வேறுபாடுமின்றி ஒன்று சேர்ந்தவர்கள் 14-10-'87 அன்று ஒரே நாளில் மூன்று கிலோமீட்டர் தூரத்திற்கு 11அடி அகலத்தில் சாலை ஒன்றைப் போட்டு விட்டனர்.

ரோடு ரோலர் இல்லை. நவீன இயந்திரங்கள் கிடையாது. இன்ஜினீயரோ சூப்ரவைசரோ இல்லை. லஞ்ச ஊழலுமில்லை. ஆண்,



படிப்பகம்

பெண், குழந்தைகள் என அனைவரும் திரண்டனர். கம்பு, கடப்பாரை, கூடை, மண்வெட்டி என இருப்பதை எடுத்துக் கொண்டனர். மேடு பள்ளங்களை வெட்டி நிரப்பி சமப்படுத்தினர். சாலை தயாராகிவிட்டது!

சாலை சில தனியார் நிலங்கள் வழியாகவும் செல்கிறது. இதில் முக்கியமாக K.K. வஜீரவேலு செட்டியார் (இவர் ஒரு இந்திரா காங்கிரஸ் புள்ளி), ஏழுமலைசெட்டியார், இவர் மகன் முத்துகிருஷ்ணன் ஆகியோர் கடுமையாக எதிர்க்கின்றனர்.

பல ஏக்கர் நிலங்கள் வைத்துள்ள இவர்களின்காடுகளில் பாதையால் பாதிக்கப்படுவது ஐந்தாறு சென்ட் நிலந்தான். பொது நலனுக்கு விட்டுக் கொடுப்பதால் இவர்களுக்கு பெரிய பாதிப்பு ஏதும் வரப்போவதில்லை.

ஆனால் பண்ணை அதிகாரத்தைக் காட்டவும், பழமைச் சிந்தனையில் தங்களைக் கேட்காமல் சாலை போட்டதற்காகவும் பழி வாங்கும் நோக்குடன் எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

16—10—'87 அன்று அடியாட்களை டிராக்டரில் கொண்டு வந்து பயங்கர ஆயுதங்களை வைத்து மிரட்டி சாலையைக்கலைக்க முயன்றனர். ஆண், பெண், குழந்தைகள் என கானத்தூர் மக்கள் திரண்டு வந்து சாலையில் படுத்து, 'எங்களைக் கொன்றாலும்கூட சாலையைக் கலைக்க விடமாட்டோம்' எனப் போராடியிருக்கின்றனர். தகவல் அறிந்து டி.எஸ்.பி. உடனே வந்து தலையிட்டிருக்கிறார்.

பிரச்சினை தீராமல் கலவரம் ஓயாது என்பதால் மதுராந்தகம் சப் கலெக்டர், தாசில்தார், டி.எஸ்.பி ஆகியோர் முன்னிலையில் இரண்டு கிராம மக்களுக்கிடையே பஞ்சாயத்து பேசி தீர்க்கப்பட்டுள்ளது. 11 அடி அகலத்தை 7 அடியாகக் குறைப்பது(கானத்தூர் மக்கள்தான் அதைச் செய்ய வேண்டும்), நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலத்து மதிப்பின் பணத்தை 15-1-'88க்குள் கானத்தூர் மக்கள் கொடுத்து விட வேண்டும்— என தீர்ப்பாகி இரண்டு கிராமத்து பெரியவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

ஆனால் நிலச் சொந்தக்காரரில் ஒருவர் 23-10-'87 அன்று செங்கல்பட்டு கோர்டில் வழக்கு தொடுத்துள்ளார். பட்டா உரிமை தனக்குள்ளது, தனது ஒப்புதலின்றி பஞ்சாயத்தில் பாட்டனார் போட்ட கையெழுத்து தன்னை கட்டுப்படுத்தாது என பஞ்சாயத்துமுடிவை மீறுகிறார்.

பஞ்சாயத்து பண்ணிய அதிகாரிகள் தற்போது தலையிட மறுக்கின்றனர். ஆம்! இன்று நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றபின் பஞ்சாயத்துப் பேசிய அதிகாரிகளைக் காணோம். இதனுடைய உள்நோக்கம் மிகத் தெளிவானதுதான்.

நீதிமன்றம் நிலச் சொந்தக்காரனின் தனிச் சொத்தைப் பாதுகாக்க சாலையை மறுக்கும். போலீசை அனுப்பும். சாலையை அகற்ற தடுக்கும் மக்களை அடித்து உதைக்கும். கலவரம்நடக்கும். பிரச்சினை கிரிமினல் வழக்காக மாறும். சாலைப் பிரச்சினை மறந்து வழக்கு திசை திருப்பப்படும். வழக்கம் போல கானத்தூர் மக்கள் வரப்புகளில் தட்டுத் தடுமாறி உயிர்விட வேண்டியிருக்கும்.

கானத்தூர் மக்கள் பிரச்சினை கூட குப்பைக்கூடையில்தான் போடப்பட்டுக் கிடந்தது. ஆனால் மக்கள் ஒன்று சேர்ந்தவுடன் பிரச்சினையை முடித்துவிட்டனர். ஆண்டுக்கணக்கில் அவதிப்பட வைத்த அதிகார வர்க்கம் சிறு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை.

அதிகார வர்க்கமே இல்லாமல், மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதைத்தான் இச்சம்பவம் நிரூபிக்கிறது. கானத்தூர் மக்கள் சுற்றுப்புற கிராமங்கள் முழுவதற்கும் இப்பிரச்சினையைக் கொண்டு சென்று ஆதரவு திரட்ட வேண்டும்.

சாலை அகற்றப்பட்டால் கிரிமினல் வழக்கிற்கு நாம் பலியாவதால் எந்தப் பலனுமில்லை. மாறாக மக்கள் தேவைகளுக்கு எதிரான இந்த அரசுக்கு வரி செலுத்தக் கூடாது, நமது தேவைகளைப் புறக்கணிக்கும் தேர்தலை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட புரட்சிகர நடைமுறைகளில் முன்னேறும்போது மட்டுமே—அதிகாரத்தை மக்கள் கைகளில் எடுக்கும்போது மட்டுமே—பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

தகவல்:
காந்தி, மோகன்

www.padippakam.com

## அதிகாரமில்லாத பதவி

திருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட நாட்டங்கொட்டாய் (வார்டு எண் 12) பகுதியில் குடிதண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது. விவசாயக் கிணறுகளில் இறங்கி, தாய்மார்கள்—பெண்கள் தண்ணீர் எடுத்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக பகுதி மக்களின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருந்தோம். அரிசனப் பகுதிக்கும், எங்கள் பகுதிக்கும் இரண்டு ஃபோர் பம்புகள் போட அனுமதி உள்ளது என்று பதிலும் வந்தது. அடுத்து ஃபோர் என்ஜின் வந்து, நீர்மட்டம் பார்த்து, ஃபோர் போட இடமும் தேர்ந்தெடுத்துக் கொண்டது. ஆனால் ஃபோர் பம்பு தான் போடவேயில்லை.

அரசு அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக அவதிப்படுகின்ற மக்கள், வேதனையை—வெறுப்பை எங்களைப் போன்ற உறுப்பினர்களை திட்டுவதன் மூலம் தீர்த்துக் கொள்கிறார்கள். "நீங்க எல்லாம் என்னடா மெம்பறுங்க. இனிமேல் எங்க ஊருக்கு வந்த, முக்கட்டில் நிறுத்திப்பிடுவோம் ஜாக்கிரதை!" என்று மிரட்டுகிறார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாத பதவிக்கு ஏன் தான் போட்டியிட்டோம் என்று வேதனைப்படுகிறேன். அதிகாரிகளிடம் சாதாரணப் பிரச்சினைகளுக்கு கூட அலைந்து மண்டியிட வேண்டிய அவல நிலையை நினைத்து வெட்கப்படுகிறேன். பாராளுமன்ற ஜனநாயக வடிவமே போலியானது. மக்களுக்கான புதிய ஜனநாயகமே தேவை என்பதை உணருகிறேன்.

—அ. முருகேசன்,
வார்டு எண் 12 (உறுப்பினர்)
காந்தி நகர், ஊத்தங்கரை

வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப் [illegible] எண்ணிக்கை 31-5-[illegible] வரை 102.

செங்கற்பட்டு, லத்தூர் ஊராட்சி ஒன்றியம் மலையூர், கானத்தூர் கண்டிவாக்கம், நெடுமரம் ஆகிய ஆதிதிராவிட குடியிருப்புப் பகுதிகளுக்கு 1982-83 நிதியாண்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தை "நோயற்ற பகுதியாக் [illegible] ரூ. 41 கோடி செலவில் செயல்படுத்த [illegible] திட்டம் அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம்

அரசு ஒப்பு
முடியும்

இந்
நோயாளி
[illegible]
செயல்புரி
(Bio-Chem
(Patholog
திறக்கப்ப

செய
யில் பயிற்

தமிழக அரசு தனது 'தமிழரசு' ஏட்டிலே வெளியிட்டுள்ள அண்டப்புளுகு. சாலை ஏதும் அங்கில்லை.. இல்லாத சாலைக்கு கணக்குக் காட்டி கொள்ளையடித்த பணம் நமது வரிப்பணம் தான்!

படிப்பகம்

www.padippakam.com

### சாதிய தலைவர்களுடன் எம்.ஜி.ஆர் பேச்சு:

# அரசாங்க சலுகைகளைக்காட்டி அடிவருடிகளை உருவாக்கும் முயற்சி

நவம்பர் 27ஆம் தேதி முதல் சாதிய சங்க தலைவர்களுடன் பேச ஆரம்பித்த எம்.ஜி.ஆர், டிசம்பர் 7ஆம் தேதிதான் அவ்வேலையை முடித்தார். மொத்தமாக 7 நாட்கள் தொடர்ச்சியாக ஒதுக்கி 25 மணி நேரம் செலவழித்து 94சாதிய சங்க பிரதிநிதிகளிடம் குறைகளை கவனமாக கேட்டறிந்தாராம். வந்திருந்த பிரதிநிதிகளுக்காக சாதிவாரியாக ரூபாய் 250ஐ பயண செலவாகக் கொடுத்து வழி அனுப்பி வைத்திருக்கிறார். வந்திருந்த சாதியசங்க தலைவர்களும் முதல்வருக்கு பொன்னாடை போர்த்தி, வாழ்துப்பா பாடிஅவருடைய நல்லெண்ணத்தை மனமார பாராட்டி இருக்கிறார்கள். நரிக் குறவர்களின் பிரதிநிதிகள், எம்.ஜிஆருக்கு பாசி மணிமாலை, கருகு மணிமாலை மற்றும் சிவப்புநூல் அணிவித்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். எம் ஜிஆரும் அவர்களுக்குத் தனியாக வேட்டி—சேலை கொடுத்து சிறப்பாக கௌரவித்து இருக்கிறார்.

மொத்தத்தில், தலைமை செயலகம் ஏழுநாட்களாக ஒரே கோலாகலமாக இருந்திருந்திருக்கிறது. எம்.ஜி.ஆரின் உடல்நிலை பாதுகாப்பு காரணமாக தங்கள் பகுதிகளுக்கே அவரை அழைத்து பாராட்டி சீராட்ட முடியாத காரணத்தால் பல்வேறு சாதிய சங்க தலைவர்களும் எம்ஜிஆரின் இருப்பிடத்திற்கே வந்து அவரை குளிப்பாட்டிவிட்டு அவர் மனதில் தங்களுக்கு என்று ஒருதனி இடத்தையும் பிடித்து விட்டு சென்று இருக்கின்றனர்.

தொடர்சாலை மறியல் போராட்டம் நடத்திய வன்னியர் சங்கத் தலைவர்கள் போராட்டத்தை வாபஸ் பெறுமாறும் 'அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் அச்சங்க தலைவர்களுடன் எம்ஜிஆர் பேசுவார்' என்று எம்ஜிஆரின் ஆணைப்படி அறிக்கைவிட்டனர் அவரது மந்திரி பிரதானிகள். இருந்தும் வன்னியர் சங்க போராட்ட தலைமை தங்கள் 7நாள் சாலை மறியல் போராட்டத்தை திட்டமிட்டப்படி நடத்தி காண்பித்தது. பாதியில் நிறுத்திவிடவில்லை. இப்போராட்ட தலைமைக்கு தக்க பாடம் புகட்ட நினைத்தாலும், அவர்களுக்கு பின்னால் திரண்டு இருக்கும் வன்னியர் சாதியினரை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை, எம்ஜிஆர். எனவே, இப்போது 'ராஜதந்திர'த்துடன் செயல்பட்டு அனைத்து சாதிய சங்கங்களையும் அழைத்து பேசியதன் மூலம் வன்னியர் சங்க தலைமையின் மூக்கை உடைத்து விட்டதாக ஆறுதல் அடைந்திருக்கிறார். ஆனால் உண்மை அதுவல்ல. கூந்தலைச் சொரிய ஏகப்பட்ட கொள்ளியை கையில் எடுத்து இருக்கிறார். மிக விரைவில் அதன் பலனையும் அறுவடை செய்வார் எம்.ஜி.ஆர்.

● வன்னியர் சங்க தலைமை இதுவரை கோரிய, மாநிலத்தில் 20 சதவீதம் மத்தியில் சதவீதம் இட ஒதுக்கீட்டு கோரிக்கையை ஆழப்படுத்தியிருப்பதுடன் இப்போது இன்னும் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

வன்னியர்களுக்கு தரப்படும் ஒதுக்கீடு கர்நாடக அரசில் இருப்பது போல் (கம்பார்ட்மெண்ட் முறையில்) இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் 10,15 சாதிகள் சேர்ந்து ஒரு தொகுப்பாகி விடும். எனவே, வன்னியர் சாதிக்கென தனி ஒதுக்கீடு வேண்டும். இலவச கல்வியுடன், வன்னியர் சாதி குழந்தைகள் பத்தாவது வகுப்புவரை கட்டாயம் படிக்க வேண்டும் என தனி சட்டம் இயற்ற வேண்டும். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருக்கும் சலுகையுடன் வன்னியர்சமூகத்திற்கு கல்வி தேர்வில் 10 சதவீதம் கூடுதல் சலுகை மதிபெண்களும், கிராமத்திலிருந்து வருபவர்களுக்கு 20 சதவீதமும், அவர்களில் ஏழையாய் இருந்தால் 30 சதவீதமும் கூடுதல் சலுகை மதிப்பெண்களும் வழங்க வேண்டும் என்று கோருகிறது.

வன்னியர்நடத்தியசாலைமறியல் போராட்டத்தில் தி.மு.கவினர் புரிந்த அட்டுழியங்களையும் போலீசார் அத்துமீறலையும் ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறது. தாங்களும் அ.தி.மு.க அரசு விசுவாசிகள் தான் என்பதை நிரூபிக்கவே "தி.மு.க அட்டுழியம்" பற்றி கதை கட்டி அவர்களை தண்டிக்க சொல்லி எம்.ஜி.ஆரிடம் வேண்டுகிறது வன்னியர் சங்க தலைமை.

● "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து மக்கள் குறை தீர்க்கும் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்கள் எங்கள் கோரிக்கைகளை சாதகமாக ஏற்க வேண்டும்" என்ற நீண்ட பாராட்டு முன்னுரையுடன் தங்கள் கோரிக்கை மனுவை சமர்பித்து எம் ஜி.ஆருக்கு பொன்னாடை போர்த்தியது மதுரை நாடார் மகாஜன சங்கம்.

"எங்கள் சமூகத்திற்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. கோரிக்கைகளை எடுத்துக் கூறியே பெற விரும்புகிறோம்" என்று வன்னியர் சங்கத்தை ஒரு இடி இடித்து எம்ஜிஆரை மகிழ்ச்சிகடலில் ஆழ்த்தினார்கள், இச்சாதிய சங்க தலைவர்கள்.

"கல்வி வளர்ச்சியில் அரசின் பளுவை குறைப்பதில் நாடார் சமூகம் பெரும்பங்கு வகிக்கிறது", "மக்களுக்கு உணவு பொருள் விநியோகம் செய்து சமூக சேவை செய்வதிலும் எங்கள் சமூகத்தினர் ஈடுபடுகின்றனர்" என்று தாங்கள் நடத்தும் கல்வி, கடைசரக்கு வியாபாரத்தை இலவச சேவையாக சித்தரித்து, அத்தொழிலில் மேலும் தாங்கள் ஈடுபட எம்.ஜி.ஆர் அரசு உதவிபுரிய வேண்டும் எனவேண்டி நிற்கிறது. தங்கள் சாதிக்கு 20 சதவீத இட ஒதுக்கீடும், தங்கள்சாதிய பெருமகனார் டபிள்யூ.பி.ஏ சவுந்தரபாண்டியனாருக்கு சிலைவைக்க அனுமதியும், சென்னையில் முக்கியமான ஒரு கடைத்தெருவுக்குஅவருடைய பெயரும் வைப்பதோடு, தங்களுக்கு அமைச்சரவையில் ஒரு இடமும் கொடுக்க வேண்டும் "ஒரு தாயின் பரிவுடன்" இக்கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என மன்றாடியது.

ஏறக்குறைய இதே கோரிக்கையை வலியுறுத்தி நெல்லை நாடார் பரிபாலன சங்கம். சென்னைவாழ் நாடார்கள் சங்கம், கீழஈரால் நாடார்கள் உறவின் முறை சங்கம் ஆகியவையும் எம்ஜிஆரை போட்டி போட்டுக் கொண்டு பாராட்டி தங்கள் மனுக்களைச் சமர்ப்பித்தன.

● 24 மனை தெலுங்கு செட்டியார் சாதிய சங்க தலைவர்கள் 30 லட்சம் பேர் உள்ள தங்கள் சாதிக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வேண்டும் என்றும், சினிமா பாடலாசிரியராக இருந்த தங்கள் சாதிக்காரரான மறைந்த உடுமலை நாராயண கவியின் பெயரை சென்னையில் உள்ள ஒரு நகருக்கோ,





படிப்பகம்

www.padippakam.com

தெருவுக்கோ சூட்டவேண்டும் என்றனர்.

● தமிழ்நாடு விஸ்வகர்ம கைவினைஞர்கள் சாதிய சங்க தலைவர்கள், 60 லட்சம் மக்கள் தொகை உள்ள தங்கள் சாதியினருக்கு மாநிலத்தில் 5 சதவீதம், மத்தியில் 2 சதவீதம் இட ஒதுக்கீடும், கவுர முறையில் ஆங்கிலோ இந்தியரை எம்.பி., எம்.எல்.ஏயாக நியமிப்பது மாதிரி தங்கள் சமூகத்தினரையும் நியமிக்க வேண்டும் என்றனர். அரசவை நர்த்தகி, அரசவை நாதசுர கலைஞர் என அரசு நியமித்திருப்பது போல் கோவில்களையும், அதில் உள்ள சிற்பங்களையும் உருவாக்கிய விஸ்வகர்ம சிற்பி ஒருவரை அரசவை சிற்பியாக நியமிக்க வேண்டும் என்றனர்.

● தமிழ்நாடு கம்ம மகாஜன சாதிய சங்க தலைவர்கள், எங்கள் குல சென்னப்ப நாயக்கர் பெயரால் இருந்த பட்டணம், சென்னை என மருவிவிட்டதால்,மீண்டும்அந்த மாமன்னரின் பெயரை நினைவுகூறும் வகையில் சென்னை மாவட்டத்தை “சென்னப்ப நாயக்கர் மாவட்டம்” என்று பெயர் மாற்றி அழைக்க வேண்டும் எனவும் மதுரை மாவட்டத்துக்கு “மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மாவட்டம்” என்றும், “எங்கள் குலப் பெண்மணி” ராணிமங்கம்மாள் பெயரை ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு பெயர் சூட்ட வேண்டும் என வேண்டி கேட்டுக் கொண்டதுடன் 60லட்சம் பேர்உள்ள தங்கள் சமூகத்திற்கு அதற்கேற்றார் போல் இடஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

“எல்லோருக்கும் சமநீதி என்ற முறையில் அனைத்து இனத்தவரையும் அழைத்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை கேட்பதன் மூலம் முதல்வர் எம்ஜிஆர் ஒரு புதிய சரித்திரத்தையே படைத்துவிட்டார்” என்ற வாழ்த்துபாவுடன் மனுவைச்சமர்பித்த பார்க்கவ குல சாதிய சங்க தலைவர்கள், தங்கள் இனத்தை சேர்ந்த வி.வி. சாமிநாதனுக்கு அமைச்சர் பதவி கொடுத்ததற்காக முதல்வர் எம்ஜிஆருக்கு ‘நன்றி’ செலுத்துவதாகவும் இதே போன்று உயர்நீதிமன்ற நீதிபதி பதவி, கலெக்டர், காவல்

**வன்னியர் நடத்திய சாலைமறியல் போராட்டத்தில் தி.மு.கவினர் புரிந்த அட்டூழியங்களையும் போலீசார் அத்துமீறலையும் ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறது. தாங்களும் அ.தி.மு.க அரசு விசுவாசிகள்தான் என்பதை நிரூபிக்கவே “தி.மு.க அட்டூழியம்” பற்றி கதை கட்டி அவர்களை தண்டிக்க சொல்லி எம்.ஜி.ஆரிடம் வேண்டுகிறது வன்னியர் சங்க தலைமை.**

துறை உயர் அதிகார பதவிகளும் வழங்கவேண்டும்என்று பணிவுடன் கேட்டுக் கொண்டனர்.

● ரெட்டியார் சாதி சங்கத்தினர், 35 லட்சம் மக்கள் தொகை கொண்ட தங்கள் சாதிக்கு 7சதவீத ஒதுக்கீடும், தென்ஆற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரிக்கும்போது (!)ஓமந்தூரை உள்ளடக்கியமாவட்டத்தை ஓமந்தூர் மாவட்டம் அல்லது ஓ.பி.ஆர் மாவட்டம் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

● தேவர் சாதிய சங்க தலைவர்கள், 2 கோடிபேர் உள்ளதங்கள் சாதிக்கு 15 சதவீத இட ஒதுக்கீடும், 6 உட்பிரிவுகளைக் கொண்டு அழைக்கப்படும் தங்கள் சாதியைச் சேர்ந்த அனைவரையும் தேவர் என்று ஒரே பெயரில் இணைத்து சமமாக சலுகைகள் வழங்கவேண்டும் எனவும் ஆறு உட்பிரிவுகளில் ஒன்றான குற்ற பரம்பரையினரின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவர் சீரமைப்பு கார்ப்பரேஷன் ஒன்று அமைக்கும் படியும் தேவர் சாதியினர் அனைவரையும்குற்றப் பரம்பரை பட்டியலில் சேர்த்துவிடும்படிசுற்றி வளைத்து மூக்கைத் தொட்டனர்.

● ஒன்றரைக் கோடிக்கும் அதிகம் மக்கட்தொகை உள்ள தங்கள் அரிசன சாதிக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு கோரினர் அரிசன சாதி சங்க தலைவர்கள். தங்கள் சாதிய மக்களின் மேம்பாட்டிற்கு தேவையான திட்டங்களை மேற்கொள்ளவும் அவற்றிக்கு வழி கூறவும், சமூக—மற்றும் பொருளியல் வல்லுனர்களை உள்ளடக்கிய ஒரு கமிஷன் அமைத்து ஆய்வு செய்யும் படியும், தென் ஆற்காடு மாவட்டத்

வன்னியர் சங்கத்துடன் இவர்களை குடுமிபிடி சண்டை போட வைத்து நிலைமையை சமாளிக்கப் பார்க்கிறார்.





வன்னியர் சங்கத் தலைவர் ராம்தாஸ்

தில் தாழ்த்தப்பட்ட மக்களின் அச்சத்தைப் போக்க அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க ஒரு தனி போலீசுப்படையை அரசு நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

● சவுராஷ்ட்டிரா சாதிய சங்கத்தினர் சாதிய சங்கங்கள் அளிக்கும் சாதி அத்தாட்சி பத்திரங்களை அடிப்படையாகக்கொண்டு, தாசில்தார்கள் தாமதம் இல்லாமல் சாதிய சான்றிதழ்களை வழங்க அரசு கூடிய விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர்.

● பிராமண சாதிய சங்கத் தலைவர்கள் சாதி ரீதியாக இட ஒதுக்கீட்டுமுறையே சட்டத்திற்கு புறம்பானது என்றும் பிற்பட்ட வகுப்பினருக்கான முன்னுரிமை—சிறப்பு சலுகை என்பதை பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு என அமுல்படுத்தி வருவது பகுத்தறிவுக்கு, அரசியல் சட்டத்திற்கே எதிரானது. எனவே, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களை முன்னேற்றுவது என்ற அடிப்படையில் இட ஒதுக்கீட்டு முறையை மாற்றி அமைக்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 25,000 ருபாய்க்கு குறைவான வருமானம் உள்ள அனைவருக்கும் பின்தங்கிய வருக்கானஒதுக்கீட்டு முறையை அமுல்படுத்த வேண்டும் என்றனர்.

மேலோட்டமாகப் பார்த்தால் இது, நிலைமைகளை சீர்திருத்த கூறப்படும் முற்போக்கு கருத்தாக தெரியும். இட ஒதுக்கீட்டு சலுகையின் மூலம் பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்கள், முன்னேறி விடலாம் என்ற அடிப்படைக் கருத்தை இவர்கள் எந்தவிதத்திலும் கேள்வி குறியாக்கவில்லை. அத்தோடு அதிகார வர்க்கமே உயர் அதிகாரம் படைத்தது என்பதை ஏற்றுக் கொள்ள வைத்து பிரச்சினைக்கு அவ்வர்க்கத்திடமே மீண்டும் புகலிடம் தேடுகின்றனர், இந்த ‘அறிவாளி’ சாதிய சங்கத்தினர். சாதியையும், வருமானத்தையும் தீர்மானிப்பது அதிகாரவர்க்கம் என்று இருக்கும் போது லஞ்சம் கொடுத்தால், பணம் படைத்தவர்கள் அனைவரும் தாங்கள் பஞ்சப்பாராரிகள் என்று ஒரு கோடி சான்றிதழ்



படிப்பகம்

பெறலாம். ஏழை எளிய மக்கள் இதை நடைமுறை ரீதியாக தினமும் கண்கூடாக கண்டு ஏதும் செய்ய முடியாமல் முடங்கி கிடப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆக, பொருளாதார ரீதியில் இட ஒதுக்கீடு செய்தாலும், அதிகார வர்க்கத்தின் சிவப்பு நாடாவுக்குள் புகுந்து அச்சலுகைகளை அனுபவிப்பர்கள் பணம் படைத்தவர்களே. அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே அமுலில் இருப்பது கீழ்சாதி என்ற ஒரே வரையறை மட்டுமல்ல, ஆண்டு வருமானத்தையும் கணக்கிட்டுதான் இட ஒதுக்கீட்டு சலுகைகள் வழங்கப்படுகிறது.

இன்னும் ஏனைய சாதிய சங்க தலைவர்களும், தங்களுடைய சாதி நகரங்களுக்கும், தெருக்களுக்கும் தங்கள் சாதிய தலைவர்கள், மன்னர்கள் பெயர்கள், சிலைகள் வைக்க சொல்லி வேண்டுவது, ஏற்கனவே இவ்வாறான கோரிக்கைகளில் ஏதாவது ஒன்றை அரசு நிறைவேற்றியிருந்தால் அதற்காக எம்ஜிஆர் அரசுக்கு புகழ்மாலை சூட்டுவது என்று ஒரு வளர்ப்பு பிராணிக்கே உரிய குணாம்சத்தோடு விதிவிலக்கின்றி எல்லா சாதிய தலைவர்களும் எம்ஜிஆருடன் கொஞ்சிக் குலாவினார்கள்.

மக்களின் அறியாமையை குறிப்பாககிராமப்புறவிவசாயிகளின் பாமரத்தனத்தை தனது மூலதனமாகக் கொண்டு சினிமா கவர்ச்சியின் மூலம் ஆட்சியை பிடித்த எம்



நன்றி! நன்றி!! நன்றி!!

தமிழ்நாடு விஸ்வகர்ம கைவினைஞர்கள் சங்கத்தின்

மாண்புமிகு தமிழக முதல்வர்
"டாக்டர்"
புரட்சித் தலைவர்

இவண்,
தமிழ்நாடு விஸ்வகர்ம கைவினைஞர்கள்சங்கம்
ஸ்ரீவிஸ்வேஸ்வர பவனம்.
No. 76, பில்லலக்சாலை, சென்னை-10.


அனைத்து சாதிய சங்கங்களையும் அழைத்து பேசியதன்மூலம் வன்னியர் சங்க தலைமையின் மூக்கை உடைத்து விட்டதாக நினைத்திருக்கிறார். ஆனால் உண்மை அதுவல்ல. கூந்தலைச் சொரிய ஏகப்பட்ட கொள்ளியைகையில்எடுத்து இருக்கிறார். விரைவில் அதன் பலனையும் அறுவடை செய்வார் எம்.ஜி.ஆர்.

ஜிஆர் நகர்புற மக்கள்—மேல்சாதி நடுத்தரவர்க்கத்தினர் — முதலில் தம்மை ஆதரிக்காததைக் கண்டு கொஞ்சகாலம் 'முற்போக்கு' நாடகம் ஆடினார். அதில் ஒன்று, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய்9000க்கும் குறைவான வருமானம் உடையவர்கள் அனைவருக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கான சலுகைகள் கொடுக்கப் போவதாக ஆணைப் பிறப்பித்தார். '80ம் ஆண்டில் இந்திரா—கருணாநிதிகூட்டணிபாராளுமன்ற தேர்தலில் பெரும் வெற்றி பெற்றவுடன் பீதியடைந்து முற்போக்கு வேடத்தை கிழித்தெறிந்தார். ஆண்டு வருமான வரையறையை நீக்கிவிட்டு ஏற்கனவே 31 சதவீதமாக இருந்த பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி கீழ்சாதியினரின் குறிப்பாக கிராமப்புற விவசாயிகளின் காவலனாக வேடம் தரித்தார்.

ஓட்டுப் பொறுக்கும் இடத்தில் உள்ள சாதியினரை எல்லாம் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்து அரசாங்க சலுகைகளை வாரி வழங்குவதாக வாக்குறுதி கொடுத்து சாதி வேட்பாளரை நிற்க வைத்து வெற்றிமேல் வெற்றி பெற்றார். கடைசியில், இடைத் தேர்தல்களில் கூட இதையே ஆயுதமாக பயன்படுத்தினார். கூட்டங்களுக்கு சென்றால் பகுதியில் செல்வாக்கு படைத்த சாதிய சங்க தலைவர்கள் அவர்களது முன்னோர்கள் செய்த 'தேசத் தொண்டு'கள், 'தர்ம' காரியங்கள் பற்றி உருக்கமாக கதையளக்கவும், அவர்களுடைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து அவர்களை கௌரவிக்கவும் தம் மந்திரிபிரதானிகளை உசுப்பிவிட்டதுடன், தானே முன்னின்றும் நடத்தினார்.

கிராம மக்களிடம் தேங்கி நிற்கும் நிலப்பிரபுத்துவ எஜமான சாதி விசுவாசத்தை தூண்டி விட்டு தானும் அவர்கள் சாதிய முன்னோர்கள் மீது பெருத்த மதிப்பு வைத்திருப்பதாக உருகி போனார். ஆக, சினிமா கவர்ச்சி நிறமிழந்து போனதால் சாதி வெறியை தூண்டிவிட்டு ஓட்டு பொறுக்குவதை விதியாக்கினார். இதற்காக பிரதான சாதிய சங்க தலைவர்களை பேணிப் பாதுகாத்து அவர்களுக்கும் அவர்களது பினாமிகளுக்கும் அரசாங்க சன்மானங்கள் கொடுத்து வாட்டி வளர்த்தார்.

எம்ஜிஆரின் அதிகாரபலம் தங்களிடம் தங்கி நிற்பதை உணர்ந்து கொண்ட வன்னியர் சாதி போன்ற சில பிரதான சாதிய சங்க தலைமை தம் பினாமிகளுக்கு அதிக அரசு சன்மானங்களைக் கோருவதுடன், அதை சாதிப்பதற்காக வலுவான எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி, போட்டி அதிகாரத்துக்கான தலைவர்களாக வளர்ந்துள்ளனர். இவர்களின் எச்சரிக்கைகளை கண்டு மிரண்டு போன எம்ஜிஆர் இப்போது உதிரி சாதிய சங்க தலைவர்களை எல்லாம் தனக்கு துணையாக அழைத்திருக்கிறார். வன்னியர் சங்கத்துடன் இவர்களை குடுமிபிடி சண்டை போட வைத்து நிலைமையை சமாளிக்கப் பார்க்கிறார்.

யினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப பல்வேறு அரசு சலுகைகளையும் அரசாங்க பதவிகளையும் கணக்கு போட்டு கேட்டதிலேயே குறியாய் இருந்தனர்.

சென்னை நகர செரீப்பதவி, உயர்நீதிமன்ற நீதிபதி பதவி, மாவட்ட நீதிபதி பதவி, தேர்வு ஆணைகுழு உறுப்பினர் பதவி, கலெக்டர், காவல்துறை உயர் அதிகாரிகள் பதவி, தங்கள் சாதி தொழிலுக்கான தனி வாரியம் (பனைமர வாரியம், வன்னியர் வாரியம்), மதிப்பெண் சலுகை, மான்யம், கடனுதவி, பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் சாதியினர் தங்களை அதற்கும் கீழான—ஒப்பீட்டு அளவில் சலுகைகள் அதிகம்வரும் - சாதிய பட்டியலுடன் சேர்க்க உட்பிரிவுகளை அதிக சலுகைக்கான உட்பிரிவு சாதி யுடன் ஒன்றிணைக்க கோருவது, மாவட்டங்களுக்கும்,

பாசிச ராஜீவ் கும்பல் நெருக்கடியிலிருந்து மீள இட ஒதுக்கீட்டு கலவரத்தை தொடர்ந்து ஒரு ஆயுதமாக, குஜராத்—அகமதாபாத்தில் இட ஒதுக்கீட்டு கலவரத்தை விசிறிவிட்டு, ரத்த ஆறு ஓட வைத்து மக்களின் கவனத்தை ஒருசேர அதிலே குவித்து தங்களுடைய பொருளாதார கிரிமினல் குற்றங்களை மறைப்பது போல எம்ஜிஆர் அரசும் தமிழ்நாட்டில் பல அகமதாபாத்களை உருவாக்க பாசிச ராஜீவ் கும்பலின் அடியொற்றி நடைபோடுகிறது.

● குணசேகரன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## போர் வெறியர்களுக்கு மாணவர்கள் கொடுத்த புது மரியாதை!

நிகரகுவாவில் புரட்சிகர மக்கள் அரசை ஒழித்துக்கட்ட அமெரிக்க சி.ஐ.ஏ. உளவுநிறுவனம், கான்ட்ரா என்ற எதிர்ப்புரட்சி சதிகார கும்பலுக்கு பண உதவி, ஆயுத உதவி என பல்வேறு வழிகளில் உதவி வருகிறது.

ரீகனின் இந்த எதிர்ப்புரட்சிநடவடிக்கைகளை எதிர்த்தும், நிகரகுவா, எல்சால்வடார் மக்களின் புரட்சிகர நடவடிக்கைகளை ஆதரித்தும் உலகெங்கும் மக்கள் போராடி வருகின்றனர். ரீகனுக்கு உள்நாட்டிலேயே நாளுக்கு நாள் எதிர்ப்பு பெருகி வருகிறது.

அடால்போ காலெரோ என்பவன் கான்ட்ரா எதிர்ப்புரட்சி கும்பலுடன் சேர்ந்து நிகரகுவா மக்களுக்கு எதிராக சதிவேலை செய்தவன். தனது அனுபவத்தை சக கூலிப்படைகளுடன் பகிர்ந்து கொள்ள அக்டோபர் 2ல் ஹார்டுவர்டு பல்கலைக் கழகம்வந்தான்.

செய்தி அறிந்த மாணவர்களும் இடதுசாரி சிந்தனையாளர்களும் அணிதிரண்டு காலெரோவை அடித்து விரட்ட தீர்மானித்தனர். எதிர்ப்பைக் கண்டு பயந்த பல்கலைக் கழக நிர்வாகிகள் போலீசு உதவியை நாடினர். எதிர்ப்பாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

காலெரோ கூட்ட நிகழ்ச்சிக்கு தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். கடும் சோதனை, அடையாள அட்டை, வீடியோ கேமெரா என போலீசு கும்பல் ஏக கெடுபிடி செய்தது.

கூட்டம் ஆரம்பித்தது. 'நிகரகுவா காண்ட்ரா புரட்சி...' என காலெரோ பேச ஆரம்பித்ததும் ஒரு மாணவர் ஓடி வந்து மேடையில் துள்ளி ஏறினார். காலெரோவுக்கு அடி உதை சரளமாக விழுந்தது

போலீசின் அவ்வளவு கட்டுப்பாட்டையும் மீறி உள்ளே வந்த ஜேசுவாலாப் என்ற மாணவர் நடத்திய தாக்குதல் இது! அதிகாரவர்க்கம் திக்பிரமை பிடித்துஎன்னசெய்வதெனத் தெரியாமல்திகைத்து நின்றது. பின்னர் லாப் கைது செய்யப்பட்டார்.

'லாபை விடுதலை செய்! கொலைகாரன் காலெரோவை கைது செய்' என மாணவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு அதிகார வர்க்கம் அடிபணிந்தது.பின்னர்லாப்விடுவிக்கப்பட்டார்.

ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் நடந்த இச்சம்பவம் போர் வெறி எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்கு பேருற்சாகத்தைக் கொடுத்துள்ளது. யுத்தவெறியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வது மட்டுமல்ல; எதிரிகளை கையும் களவுமாகப் பிடித்து அடிக்கவும் இப்போது மக்கள் தயாராகிவிட்டார்கள். போர் வெறியை நியாயப்படுத்த முடியாத ரீகன் கும்பலோ கிலிபிடித்து நடுங்கிக் கொண்டிருக்கிறது.

### சாவு வியாபாரியின் கோழைத்தனம்!

ஈரானுக்கு ஆயுதங்களை இரகசியமாக விற்றார் அமெரிக்க யுத்த வெறியன் ரீகன். அந்த ஆயுத விற்பனை இஸ்ரேல் மூலம் நடந்தது. விற்பனைத் தொகை நிகராகுவாவில் உளள தேசிய அரசை வீழ்த்தப் போரிடும் அமெரிக்கக் கூலிப் படையான 'காண்ட்ரா'விற்கு இரகசியமாகத் தரப்பட்டது. ஈரான்—காண்ட்ரா ஊழல் எனப்படும் இந்த மோசடி அமெரிக்க நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும் தெரியாமல் இரகசியமாக நடந்தது. இந்த மோசடியில் ரீகனுக்கு உடந்தையாக இருந்து தரகு வேலை செய்தவர் அமெரிக்க தேசிய இராணுவ முன்னாள் ஆலோசகர் ராபர்ட் இ. மெக்ஃபார்லேன்.

ஈரான்-காண்ட்ரா மோசடியை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ளடவர் விசாரனைக் கமிஷன் முன்பு சாட்சியம் சொல்ல இருந்தார் மெக்ஃபர்லேன். ஆனால் முதல் நாள் இரவு அளவுக்கு அதிகமாகத் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலை செய்ய முயன்றார். அவர் எழுதி வைத்திருத்த குறிப்பு வெளியிடப்படவில்லை. கடைசி நேரத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பிழைத்துக் கொண்டார். மோசடி அ அதன் பிறகு குழப்பமாகவும் மன அமைதியின்றியும் தவித்ததாக பெயர் சொல்ல விரும்பாத அவரது நண்பர் கூறுகிறார்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதாகச் சவடால் அடித்த உலக சாவு வியாபாரி ரீகன், எதிர்ப்புரட்சி பயங்கரவாதிகளான காண்ட்ராவை கூலிப் படையாக்கிக்கொண்டார். இவற்றிற்கு தரகு வேலை பார்த்தவனின் தற்கொலை முயற்சி ஏகாதிபத்தியவாதிகளின் கோழைத்தனத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

• நூல் அறிமுகம்




### ரஷ்யக் கரடியின் உண்மை முகம்

—கர. இராசன்

ஆலைத் தொழிலாளியான தோழர் கர. இராசன் சரியான அணுகு முறையுடன் தினமணி நாளேட்டிலிருந்தும் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் இதழ்களிலிருந்தும் செய்திகளைத் திரட்டி ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் உண்மைச் சொருபத்தை இச்சிறு நூலில் பாட்டாளி வர்க்கக் குணாம்சத்தோடு தோலுரித்துக் காட்டுகிறார்.

விலை ரூ: 6

கிடைக்குமிடம்:

தோழமை வெளியீடு
20, ப.கோதண்டபாணிதெரு
கும்பகோணம்—612001

சிரியரும் வெளியிடுபவரும் : எஸ். மதியழகன், 21, பாலர்ஜிசிங்தெரு சைதாப்பேட்டை சென்னை—600015
ச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107-A பெரியார் பாதை(மேற்கு) சென்னை—600094.

படிப்பகம்

www.padippakam.com

இதோ இங்கிருப்பது, 'ஹோவரிங்' எனப்படும் பறக்கும் படகு. சக்கரங்கள் அற்றது. எங்கும், எதிலும் செல்லக் கூடியது. தண்ணீர், மணல், பனிப்பாறை, சதுப்புநிலம் எதுவும் இதற்கு தடை கிடையாது. அந்தந்த இடத்திற்கு வசதியாக இதில் எந்த ஒரு சிறு மாற்றமும் செய்ய வேண்டிய தேவையில்லை. தரையிலிருந்து 15 செ. மீ. உயரத்தில் ஒரு குட்டி விமானம் மாதிரி பறக்கும்.

அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ் நாடுகளில் இது சர்வ சாதாரணமாக புழக்கத்தில் இருக்கிறது. ஏற்கனவே கேரள அரசு திருவனந்தபுரத்தில் இதை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இப்போது இதை மெரினா கடற்கரையில் பிரபல்யமாக்குவதற்கு துரித முயற்சிகள் நடந்து வருகிறது. காற்றிலேயே மிதப்பதால் உல்லாச பயணிகளுக்கு பொழுது சுகமாக போகுமாம் கடற்கரையில், இது போலீசின் தேடுதல் வேட்டைக்கும் உதவியாக இருக்குமாம்.

இதோ அனாதரவான நிலையில் தலையில் துண்டைப் போட்டு குளிரில் நடுங்கும் இச்சிறுவன் சென்னை—ராயபுரம் காசிமேடு மீனவ குப்பத்தைச் சேர்ந்தவன். சமீபத்தில் பெய்த மழையால் மீனவர்களால் கடலுக்கு செல்ல முடியவில்லை. தொழில் இல்லாததால் கட்டுமரங்களும் சோம்பிக் கிடக்கின்றன. இரவு பகல் பாராது மீன் பிடித் தொழில் செய்யும்போதே மீனவர்களுக்கு சாப்பாட்டுக்கு திண்டாட்டம். மழைக்காலத்தில் அவர்கள் படும் துன்பத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. வயிற்றுக்கு இல்லாமல் குளிரில் விறைத்துப் போய் முடங்கி கிடப்பார்கள். அவர்களுடைய தொழில் சாதனங்களும் இருப்பிடங்களும் பல நூறு ஆண்டுகளுக்கு முந்திய, சொற்ப அளவே பயன்மதிப்பு உள்ளவை. சாதாரண காலங்களிலேயே அவற்றால் மீனவர்களுக்கு பெரிய அளவில் எந்த பயனும் இல்லை. மழை, காற்று நேரங்களில் கேட்கவே வேண்டியதில்லை. அவர்களுடைய தொழில் பாதுகாப்பு மேம்பாட்டிற்கு அரசு சுண்டு விரலைக்கூட அசைத்ததில்லை. சொல்லப்படும் திட்டங்கள் எல்லாம் வெறும் காகிதக் குப்பைகளே. அவ்வளவு ஏன், இவ்வளவு துயரங்கள் மத்தியில் இவர்கள் உயிர் பிழைக்கக் கூட அனுமதி இல்லை.



மெரினாவை அழகுபடுத்துவது என்ற பெயரில் மெரினா மீனவர்களின் தொழிலுக்கே வேட்டு வைத்து அவர்களை அங்கிருந்து விரட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் பல மீனவர்களின் உயிரைக் குடித்தது பாசிச எம்ஜிஆர் தலைமையிலான தேவாரம் போலீசு கும்பல். இன்றளவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்த லட்சணத்தில் அவர்களின் தொழில் பாதுகாப்பு பற்றி சிந்தித்துப் பார்க்குமா இக் கேடுகெட்ட அரசு.

உண்டு கொழுத்துவிட்டு விட்டேர்த்தியாக ஊர் மேயும் மேட்டுக் குடி வர்க்கத்திற்கும் வெளிநாட்டு பயணிகளுக்கும் பொழுது போக்குக்குகூட அதிநவீன வசதிசெய்தும் உழைக்கும் மக்களுக்கு அவர்கள் வயிற்றுப் பாட்டுக்கே ஆதாரமாய் உள்ள தொழிலுக்கு குழிபறிக்கும் சுகஜீவி கும்பலின் கைக்கூலி ஆட்சியாளர்களை இன்னும் எத்தனை நாள்தான் தண்டிக்காமல் விட்டு வைப்பது? ●

# இதுதான் இன்றைய இந்தியா




படிப்பகம்